உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௪௭.] கர-௵ ஆனி—ஆடி ௴ [பகுதி ௮-௯.
Vol. 47. June—August 1951 No. 8-9.

உள்ளுறை.

அன்பு:— } திரு. N. R. கிருஷ்ணசாமி ஐயங்கார் B.A., B.L. அவர்கள். ௧௦௫—௧௦௮

களவழிநாற்பது ஆராய்ச்சி:— } திரு. பண்டித. இராமசுப்பிரமணிய நாவலரவர்கள். ௧௦௯—௧௨௭

உவமையும் தோனியும்:— } திரு. வித்துவான் R. நாராயண சுவாமி அவர்கள் ௧௨௮—௧௩௭

மதிப்புரை:— பத்திராசிரியர் ௧௩௭—௧௪௰

நாலடியார் இருவருரைத்திருத்தம்:— } திரு. சத்தியவாகீசுவரைய ரவர்கள். ௧௪௧—௧௪௪

பத்திராசிரியர்—திரு, நா. அப்பனையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1952.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by T. N. APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54 Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியனவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

S. சிவஸ்வாமி,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி—சஎ.] கர-ஹூ ஆனி—ஆடி மீ [பகுதி அ-கூ.

Vol. 47. June—August 1951 No. 8-9.

அன்பு.

இராமவதாரம்—யுத்தகாண்டம்

மருத்துமலைப்படலம்

4-ஆம் பாடல்

[ஸ்ரீ N. R. கிருஷ்ணசாமிஐயங்காரவர்கள், B.A., B.L., மதுரை.]

'என்பென்ப தியாக்கையென்ப துயிரென்ப திவைகளெல்லாம்
பின்பென்ப வல்லவேனும் தம்முடை நிலையிற்பேரா
முன்பென்ப வுளவென்றுலு முழுவதுந் தெரிந்தவாற்றுல்
அன்பென்ப தொன்றின் தன்மை யமரரு மறிந்ததன்றுல்'

என்பு யாக்கை உயிர் என்பவை பின்பேயுள்ளன, அன்பு அவைகட்கு முன்னின்று அவைகளை ஆக்கித்தருவது; என்பது ஒரு சாரார் துணிபு. அவ்விதம் அல்ல, என்பும் யாக்கையும் உயிரும் தான் முன்பேவருவன; பின்பு அவைகளிடத்தே அன்புதோன்றுகிறது; என்பது மற்றொருவர் மதம். ஆனுல் அவர்களும் இவ்வென்பும் யாக்கையும் இறந்து, உயிர்மட்டில் பல்பிறப்பும் பிறந்து தம்நிலையிற்பெயர்ந்து சுழல்வது; ஆனுல் இச்சுழல்களுக் கெல்லாம் முன்னமே, இவைகளுடைய நிலையிற்போல் அன்றித் தன்னிலை

கெடாமலிருப்பது அன்பு; என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். என்பு யாக்கை உயிர், இவைதான் முதலில் உளவாகின்றன, இவை களாலான ப்ராணியிடத்தில்தான் அன்பு தோன்றுகிறது, என்று கூறினும் முற்றுமுணர்ந்த முதுபுலவராகிய திருவள்ளுவரும் அன் பென்னும் ஒன்றின் தன்மையை அறிந்திலர்; என்பது இதன் பொருள்.

இந்தப்பாடலைத் திருக்குறளின் 8வது அதிகாரமாகிய அன்புடை மையின் சிறப்புப்பொருள்களைச் சேர்த்தமைத்த சிறப்புடைத் தெனலாம். அந்த அதிகாரத்தின் ஒவ்வொரு குறளினுமுள்ள முக்கியச் சொற்களைக்கூட்டி முக்கியப்பொருள்களை இப்பாடலில் தொகுத்திருத்தல் ஆராயற்பாலது.

என்பும் யாக்கையும் உயிர் உடலில்வாழ்வதற் கின்றியமை யாதவை.

இந்த என்பும் அதன் உறவும் அன்பின்பாலதென்பதை அன் புடையார் தன் என்பும் பிறர்க்குரியர் என்றும்; உயிர்க்கு என்போ டியைந்த தொடர்பு, அன்போடியைந்த வழக்கென்றும்; என்பிலாத உயிர்களைக் கதிரவன் காய்ந்துகொல்வதுபோல், அன்பிலாதவுயிரை அறம் காய்ந்து கொல்லுமென்றும்; உயிரின் நிலையே அன்பின்வழி யுள்ளது என்றும்; 2, 3, 7, 10 குறள்களிற் கூறியுள்ளது நோக்கத் தக்கது.

யாக்கைக்கு அன்பு இன்றியமையாததென்பதை உயிர்வாழ் வார் முகத்தால் ஆர்வமுடையவர் கண்ணீர் வெளிக்காட்டுமென் றும், அன்புளார் எல்லாவற்றையும் பிறருக்கு அர்ப்பணம் செய்வ ரென்றும், உள்ளே அன்பில்லாத வாழ்க்கை உயிர்களுக்குதவாத கள்ளிமுதலியவை பாலையில்வளர்வதற்கொப்பதென்றும், உண்மை யான ஜீவனைச்செலுத்தும் அன்பென்னும் தத்துவமில்லாத உடல் என்புமுதல் தோல்வரையுள்ள வுயிரற்ற ஜடப்பொருள்களாலான

ஒரு பதுமைக்கு ஸமானமென்றும்; 1, 2, 8, 10 குறள்களாற் கூறுவதும் நோக்கத்தக்கது.

அவ்வன்பின் பயனை ஆர்வமும் நட்புமாகிய பெருஞ்சிறப்பையுண்டாக்குவதென்றும், உலகத்தில் இன்பமடைந்தாரென்பதே அன்புடையாரையேயாகுமென்றும், 4, 5 குறள்களும்; அன்பொன்றே அகத்துறுப்பாகும், அஃதில்வழிப் புறத்துறுப்புக்களாலெய்தற்பால தொன்றுமில்லை; என்பதை யாக்கையென்னும் சொல்லாற் சுட்டிக்காட்டி 9-வது குறளும் குறிப்பன.

இனி உயிருக்கும் அன்புக்குமுள்ள தொடர்பை 3, 7, 8, 10 குறள்கள் குறிப்பன.

இனி இவைகளின்பொருளைக் கம்பர் பாகுபடுத்தியுள்ளவாற்றை நோக்குவாம். உயிருக்கு என்போடேற்பட்ட தொடர்பு அன்போடு பொருந்துதற்குவந்த நெறியின்பயனென்றும், உடம்பு என்புதோல் போர்த்ததாய்க்காண அதற்குயிர்நிலை அன்பேயென்றும், அன்பு முன்பே ஸித்தித்திருக்க அதைச்செய்தற்கே என்போடேற்பட்ட தொடர்பும் தோல்போர்த்தவுடம்பும் உயிரும்என்றும், இவை மூன்றும் பின்புவந்து பொருந்துவனவாகி முன்பேயுள்ள அன்பை ஏற்று வினைசெய்ய அவைகளைப் பண்படுத்திக்கொண்டு உயிருடன் பிறப்பது அவ்வன்பொன்றே என்றும் குறிப்பிடுவாராகிக் கம்பர், 'என்பெனப் தியாக்கை யென்ப துயிரென்ப திவைகளெல்லாம் பின்பு': அதாவது 'என்பு யாக்கை உயிர் இவைகள் அன்புசெய்வதை முக்கியமான முதற்பொருளாக்கொண்டு அதற்கேற்பத் தம்மை யியைவித்துக்கொண்ட பிந்தியபொருள்கள்' என்றார்.

'அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு' 'அன்புற்றமர்ந்த வழக்கென்ப' என்பனவற்றால் அன்பு முன்னுள்ளதாகி மற்றவை யதையேற்கவே இயைந்தவை என்பதும், அஃதல்லவேனும் இம்

மூன்றும் நிலைபெயருங்கால் தான் நிலைபெயராதிருப்பதென்பதும் பேசப்பெற்றது.

(1) அது ஆர்வமுடைமையை ஈந்து அதன்பால் நட்பைத் தோற்றுவிக்கும்.

(2) அதன்வழியின்றி மக்கள் இன்புற்றுவாழ்வதும், அதனால் வந்தடையும் எல்லாச் சிறப்புகளையும் அடைதலு மில்லை.

(3) அது அறத்தைச்செய்தற்குத் துணையாவதுபோல், மறத்தைநீக்குவதற்கும் துணையாகும்.

(4) இவ்வன்பில்லாவுயிரை அறம்வாழவைக்காது, கொன்றே தீரும்.

(5) அன்பிலான்வாழ்க்கை கள்ளிகாட்டாமணக்குகள்போற் பிறர்க்குதவியற்றதென்பவைகளை 4, 5, 6, 7, 8 க்குறள்கள் பேசுகின்றன. இவைகளைத் தொகுத்து உளவென்றாலும் என்றார்.

இவைகளால் அன்பு என்றுமுள்ளதென்று அதன் அழியாத் தன்மையையும், வாழ்க்கைக்கு ஸாதனமான உடலுயிர்களுக்கு அதுவே ஹேது அல்லது முக்கியஸாதனம் என்பதையும் காட்டி, உயிர் அதில் நிலைத்திருக்கிறதா? அல்லது அதுதான் உயிரில் நிலைத்திருக்கிறதா? என்பதையும் விசாரித்து, அஃதுள்ளவழி யெய்தும் நன்மைகளையும் அஃதில்லாதவழி எய்தும் கேட்டையும் 2 முதல் 10 குறள்களால் வகுத்தும் தொகுத்தும் காட்டிய வள்ளுவர், முழுவதும் உணர்ந்த ஆற்றலுடையவர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அன்பின்தன்மை கூறமாட்டாதவராய் அத்தகையபெரியாரே 'ஆர்வலர் புன்கணீர் பூசல்தரும்' என்பதால் அதன் உண்மையை மட்டும் கூறிச்சென்றார். சிற்றறிவேயுடையவனாகிய யான் அத்துறையில் முயல்வது பேதமையின்பாற்படுமென்று இந்த மகாகவி பெருமுயற்சிசெய்து தன்னைத் தப்பித்துக்கொள்ளுகிறான். அன்பு வாழ்க! மிகுக!! பெருகுக!!!

களவழி நாற்பது—ஆராய்ச்சி

திருவாளர் பண்டித, இராமசுப்பிரமணியநாவலரவர்கள்.

[௧௦௬-ஆம்பக்கத் தொடர்ச்சி]

யானைகளின் துதிக்கைகளை வெட்டுதலால், அவை 'மலைமேல் உருமெறிதலால் பாம்பினங்களைப்போலப் புரளும்' என்னும் பொருள் செறியவந்த,

"..........................வயவர்
வரைபுரை யானைக்கை நூற—வரைமேல்
உருமெறி பாம்பிற் புரளும்"—௧௩

என்றதும் சால நயம்பயந்து ஒளிர்கின்றது.

யானை மலைக்கும், வாளால் துதிக்கையை வெட்டுதல் மலைமேல் உருமு எறிதற்கும், துதிக்கை வெட்டேற்றுப் புரளுதல் இடியால் பாம்பு புரளுதற்கும் ஒப்பிக்கப்பட்டன. இதனுள், துதிக்கையை வெட்டுதற்கு உருமு (இடி) வீழ்தலை உவமைப்படுத்த நயம் பெரிதும் சிறந்துளது.

'யானைகளின் துதிக்கைகளை வெட்டுதலால் வெட்டப்பட்ட புழுதிகளினின்றும் உதிரஞ்சொரிந்தது. சொரிந்த உதிரம் பவளம் நிறைந்ததொரு பையைத் தலைகீழாகவைப்ப, அதினின்றும் சொரியும் பவளத்திரள்போல் இருந்தது' என்பது பயப்ப,

'கவளங்கொள் யானையின் கைதுணிக்கப் பட்டுப்
பவளஞ் சொரிதரு பைபோல்—திவளொளிய
ஒண்செங் குருதி உமிழும்[1] (௯) என்றது நோக்குக.

இன்னுந் தன்மைநயஞ் சிறப்பவந்த,

'கொல்யானை பாயக் குடைமுருக்கி யெவ்வாயும்
புக்கவா யெல்லாம் பிணம்பிறங்கத்—தச்சன்
வினைபடு பள்ளியிற் றோன்றுமே செங்கட்
சினமால் பொருத களத்து' (௧௫) என்றது காண்க.

யானைபாய்தலான் போர்க்களத்தின் எவ்விடத்தும் குடைகள் முருக்குண்டன; எவ்விடத்தும் பிணங்கள் பிறங்கின; இவ்வாறு ஆண்டாண்டு கவிகைகள் சீர்சிதைந்து வீழ்ந்துகிடப்பதும் பிணங்கள் சிதறுண்டுகிடப்பதுமாகிய இடம் தச்சன் தன்றொழில்செய்கின்ற தச்சுப்பள்ளிபோல் தோன்றுகின்றது. தச்சன் தன்கருவிகளையும் மரத்துணிகளையும் வேலைசெய்திட்ட

மரச்சிதறல்களையும் முறையின்றி ஆண்டாண்டுப் போகடக்கிடப்பனபோன்று போர்க்களத்து கவிகையும் பிணமும் சிதறுண்டுகிடந்தன எனக். இத்தகைய போர்க்களக் காட்சி புலவர்க்குத் தச்சன் வினைபடு பள்ளியை நினைப்பித்தது என்னை? இரண்டும் இயல்பின் ஒத்துத்தோன்றலின் என்பது.

“ஆர்ப்பெழுந்த ஞாட்பினுள் ஆளாளெதிர்த் தோடித் தாக்கி எறிதலால் ‘வீழ்தரு மொண்குருதி’ போர்க்களத்துக் கார்த்திகை விழாவில் வீடு தோறும் பலப்பலவாக ஏற்றப்படுகின்ற மிக்க விளக்கைப் போன்றிருந்தன.”

கார்த்திகைவிழாவன்று வீடுதோறும் ஏற்றப்படும் சிறுவிளக்கங்கள் போர்க்களத்து ஆண்டாண்டு ஆட்கள் எதிர்த்துவெட்டுதலால் சொரியும் குருதித் திரள்களுக்கு ஒப்பிக்கப்பட்டன. குருதியும் விளக்கமும் தம்முடைய செந்நிறத்தால் ஒப்பாவன. அன்றியும், இவ்வுவமையில் ஒரு நுட்பம் பேணப்படும். குருதி சொரிதருங்கால் இயக்கமுண்டன்றே? அதுபோலு மியக்கமும் விளக்கங்களிற் காணப்படும். காற்றெறிதலால் விளக்கு அசைவது ஆண்டைக் குருதியொழுக்கின்கண் இலக்கமாகக் கொள்ளப்படும். இன்னனம் பொருளின் பண்புதொழில்களிடையும் நுட்பங்கண்டு உவமித்தல் நல்லிசைப்புலவர்க்கே எளிதாமென்க. பொதுநோக்கில் மாணவர்க்கு இந் நுட்பம் புலப்படுவதின்று.

ஆசிரியர் அமைத்துள்ள சில உவமைகள் நகைச்சுவையையும் பயக்கின்றன.

> ‘இடைமருப்பின் விட்டெறிந்த எஃகக்கான் மூழ்கிக்
> கடைமணி காண்வரத் தோன்றி—நடைமெலிந்து
> முக்கோட்ட போன்ற களிறெல்லாம்’ (கக)

‘வீராது எஃகம் தம் நுதலிடைப்பாய்தலால், களிறுகளெல்லாம் தாம் மூன்றுகொம்புகளுடையனபோற் காணப்பட்டன’ எனவே, முக்கோட்ட களிறு எனலால் வியப்பும் அதற்கு நுதலில் எஃகம்புக்கது காரணமாக வரலின் நகையும் பயப்ப நிற்பது காணப்படும். இதில், ‘வேலின் கடைமணி காண்வரத் தோன்றி’ என்பது நயந்தருதொடர் எனற்கு ஐயமின்றும். களிற்றுக்கோடுகள் இரண்டற்கும் கிம்புரி (கண்) அமைக்கப் படுமன்றே? மூன்றாவதுகோடெனக் கூறப்பட்ட வேற்கோட்டிற்குப் பூண் இதுவெனக் கூறுவார் ‘வேலின் கடைமணி’ என்றார் புலவர்.

ஆசிரியர் உலகியனுட்பம் நன்கு ஆராய்ந்து உணருமியல்பினர் என்பது காட்டப் பல உவமைகள் இதன்கண் உள.

'இருசிறக ரீர்க்குப் பரப்பி யெருவை
குருதி பிணங்கவருந் தோற்றம்—திரவிலாச்
சீர்முழாப் பண்ணமைப்பான் போன்ற புனனாடன்
நேரரை யட்ட களத்து' (உ0)

'கழுகுகள் தம் இருசிறகரையும் விரித்து அடித்துக் குருதியையும் பிணங்களையும் கவர்ந்துண்ணுந்தோற்றம் மத்தளத்தைச் சுதிகூட்டுவதுபோல் இருந்தது' எனலால், மத்தளத்தைச் சுதிசேர்த்தற்கண் தண்ணுமையாளன் தன் கைகளால் தண்ணுமையைப் பலதரம் சிற்றெலிபட அடித்துநோக்கு முலஇயலை ஆசிரியர் நன்கு ஓர்ந்துளர் என்பது அறியப்படுகின்றது.

மறவர் எறிதலால் திசைதொறும் வீரர்தலைகள் பாரிற் புரண்டன. அப்புரளும் காட்சிக்கு ஆசிரியர் உவமைகூறுவது மிக நயம்பயந்து விளங்குகின்றது. அன்றியும், அவர் பைந்தலைகள் களத்துப்புரள்வதுகண்டனைய மெய்ம்மையையும் உள்ளுறப் படிவிக்கின்றது.

'திண்டோண் மறவ ரெறியத் திசைதோறும்
பைந்தலை பாரிற் புரள்பவை—நன்கெனைத்தும்
பெண்ணையந் தோட்டம் பெருவளி புக்கற்றே'—உச.

'பனந்தோட்டம் பெருவளி எறிதலால், பனம்பழங்களெல்லாம் உதிர்ந்து உருளும் பெற்றிமையை ஒத்து வீரர்தலைகள் பாரிடைப்புரண்டன' எனக் காண்க.

ஈண்டுத் தலைகளும் பனம்பழங்களும் கருமை நிறம் உடையவாயிருப்பது தலைசிதறுதலும் பனம்பழங்கள் உதிர்தலும் பொருத்தமுடையவாயிருப்பது உணரப்படும். பெண்ணையந்தோட்டத்துப் பனம்பழங்கள் உதிர்தற்குப் பெருவளி காரணமாதல்போல ஈண்டு வயவர் ஆண்டாண்டுத் தலைகளை எறிதற்கண் எடுக்கப்படும் ஊக்கம் டைந்தலைவீழ்ச்சிக்குக் காரணமாதல் கொள்க. இன்னும் கூர்ந்துணரின், வீரர்தலை வீழ்போழ்து அவர் பிடித்த வாள்முதலிய படைகளும் வீழுமன்றே! அவ்வீழ்ச்சி பெண்ணைத்தோட்டத்துப் பெருவளிபுக்க காலைப் பனம்பழங்களோடு வீழும் அலகுகாய்ந்த மட்டைகளை ஒக்குமென்பது.

துணிக்கப்பட்ட வீரர்கைகளைக் கழுகின்சேவல் வாயிற்கொண்டு எழுவது உவணன் ஐவாய்நாகத்தைக் கவ்விக்கொண்டு விசும்பின்கண் இவர்தலையொக்கு மென்பார்,

'எவ்வாயு மோடி வயவர் துணித்திட்ட
கைவாயிற் கொண்டெழுந்த செஞ்செவிப் புன்சேவல்
ஐவாய் வயநாகங் கவ்வி விசும்பிவரும்
செவ்வா யுவணத்திற் றேன்றும்' (உகூ)

என்றார். ஐந்துவிரல்களையுடைய துணிக்கப்பட்ட கைகட்கு ஐந்துதலைகளை உடைய நாகத்தை ஒப்பாக்கிய நயமுணர்க.

'ஓடா மறவ ருருத்து மதஞ்செருக்கிப்
பீடுடை வாளார் பிறங்கிய ஞாட்பினுள்
கேடகத் தோடற்ற தடக்கைகள் கொண்டோடி
இகலன்வாய்த் துற்றிய தோற்ற மயலார்க்குக்
கண்ணாடி காண்பாரிற் றேன்றும்' (உஅ)

இதனுள், 'பரிசைகளோடு அறப்புண்ட வீரர்கைகளை இகலன் வாயிற் கவ்வி ஓடி ஆண்டுள்ளார்க்குக் கண்ணாடி காட்டுவது போலும்' என்றுகூறியது காண்க. பரிசை கண்ணாடிக்கும் அதனைப் பிடித்தகைகள் கண்ணாடியேந்திய கைகட்குமாக இயைக்கப்பட்டன.

"சோலையிற் காற்றெறிதலால் வெடிபட்டு வேறுவேறாக ஓடும் மயிலினங்களைப்போலப் போர்க்களத்துத் தம் கணவரைஇழந்த மகளிர் நாற்றிசையும் படர்ந்து அலறுவர்;" (உகூ)

"பொய்கையுடைதலால் புனல் வெளிக்கான்ற இடங்களினெல்லாம் செய்தற்கொடிகளினிடையே வாளைமீன்கள் பிறழ்வனபோலப் போர்க்களத்து எஃகமும் வாட்படைகளும் மயங்கித் தாவின."

"போரில் மைந்தர் எஃகங்களை எறிதலால், சோர்ந்துசிந்திய குடர் கொண்டுவாங்கும் குறுநரிகள் கட்டுத்துணிற் கட்டுற்றதொடரொடு சுழலும் கோளுய்களைப் போன்றன;" (ஙூ)

என்பன உவமைகளும் கழிமகிழ்வு அளிப்பனவாகும்.

ஆசிரியர் தாம் கூறிய பலஉவமைகளிலும் ஒன்றனை மிகப்பொருந்திற்று என்று வியந்து கூறுவர். 'ஒஒ உவமன் உறழ்வின்றி ஒத்ததே' என்கின்றனர் ஆசிரியர். அதற்கு அவர் காட்டிய உவமை வருமாறு,

'ஒஒ உவமன் உறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்ட நாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெல்லாம் கீழ்மேலாய்
ஆவுதை காளாம்பி போன்ற'. (ஙகூ)

செங்கட்சோழன் கழுமலம் என்னும் இடத்தைக்கொண்ட நாளில், குதிரைகள் உதைத்தலால் பகைவருடைய குடைகள் எல்லாம் கீழ்மேலாய்ப் பசுக்கள் உதைத்த காளாம்பியை ஒத்தன; சிறப்பாக இவ்வுவமன் மாறுபாடின்றி ஒத்தது: என ஆசிரியர் கூறுவது ஆயற்பாலது. பசுக்கள் உதைப்பின் பொய்க்குடை எனப்படும் காளாம்பிகள் தலைகீழாய் நொறுக்குண்ணல் போலப் போர்க்களத்துக் குதிரைகள் உதைத்தலால் குடைகள் நொறுக்குண்டன என்க. பசுக்களின் வலிக்குக் காளாம்பிகள் எத்துணையு மாற்றாமை போல ஈண்டுக் குதிரைகளின் வலிக்கு மாற்றார் குடையாற்றாமையும், காளான் சிதறுண்ணல்போலக் குடைகள் சிதறுண்ணலும், காளான் துணிந்து பரந்து கிடப்பதுபோலக் குடைகள் பலவாறு துணிந்து சிதர்ந்து பரந்து கிடப்பதும் ஈண்டு உணரற்பால. களத்துக் குடைச்சிதறல்கண்ட புலவர்க்குக் காளாம்பியின் சிதறல் நினைவிற்புக்கு உவமைக்குப் பயன்படுவதாயிற்று. இதனை ஆசிரியர் சிறப்புடைத்து எனக்கோடற்கு ஏது ஆய்தல் இன்றியமையாதது. மாற்றார்க்கு இன்றியமையாத குடைகள் எல்லாம் சிதறுண்டன, எனவே அவர் வலியெல்லா மொடுங்கிற்று என்பது போந்தது. குதிரைகள் களத்தை உழக்கி அனைத்தும் நொறுங்கச்செய்தன எனலால், மேற் போரில்லாவண்ணம் சிதைவுபுக்கது என்பதும் போந்தது. 'கீழ்மேலாய்' என்னும் சொல்லாற்றலால், மாற்றாருடைய வெற்றியும் கீழ்மேலாயிற்று என்பதும் போந்தது. போதரவே உவமை இயைபாற் சிறந்ததுமன்றி அவ்வுவமை தானே மாற்றார் தோல்விச் சிறப்பையும் நன்கனம் வற்புறுத்தலின், இது இந்நூலில் வரும் எல்லா உவமைகளினும் எடுத்துக்கொண்டபொருட்கு நன்குபொருந்திச் சிறப்படைத்தாயிற்று என்க.

'ஓஒ உவமனுறழ்வின்றி ஒத்தது' என்று ஆசிரியர் கூறுதலால், ஏனைய உவமைகள் எல்லாம் உறழ்வுடையன என்பது கருத்தன்று. மாற்றார் குடையழிவிற்கு ஓர் சிறந்த உவமை நாடியிருந்த புலவர்க்கு 'ஆவுதைகாளாம்பி' நினைவுக்குதவ, அதனான் மகிழ்ந்து 'ஓஒ இதற்கும் உவமை வாய்த்தது, சிறப்புடைத்தாக' என்பதே ஆசிரியர் கருத்தாகல்வேண்டும். மாற்றார் குடைதலைகீழாய் வீழ்ந்தமைக்கு ஒரு சிறந்த உவமைகூறல் எளிதன்று என்க. எனவே, எளிதினுவமப்பொருள் அகப்படாத இதற்கும் சிறந்த உவமை எய்தியதுபற்றி ஆசிரியர் உவந்தும் வியந்தும் தாமே இவ்வுவமையைச் சிறப்பித்தனர் என்பது. முதல்நின்ற ஓகாரம் சிறப்பின்கண்வந்தது. இவ்வுவமைக்குப்பின்னர் ஆசிரியர் ஐந்துசெய்யுட்களில் நூலை முடிப்பதும் இது மாற்றார் வலியழிவை வற்புறுத்துமாற்றைப் புலப்படுக்கும்.

களவழியில் கூறப்படும் உவமைகள் செங்கட்சோழனுடைய மாற்றாரின் வலியழிவை ஒன்றன்மேல் ஒன்றாய்ச் சிறப்பித்துச்செல்கின்றன. நூலின் இறுதியில் மாற்றார் வலிமுற்றழிதலும் போர்நிறுத்தமும் கூறப்படுவது காண்க.

'யானைகளெல்லாம் வெள்ளிய கலப்பையான் நிலமுழுவனபோல் நிலத் திற்பட்டு வீழ்ந்தன' என்பார்,

'வெள்ளி வெண்ணாஞ்சிலான் ஞால முழுவனபோல்
எல்லாக் களிறு நிலஞ்சேர்ந்த' (௨௦)

என்றார்.

இதனுள், யானைக்கோடுகளிரண்டும் வெண்கலப்பை போலும் எனப் பட்டன. துதிக்கை நீட்டிக்கிடத்தலும் யானைக்கோடும் கலப்பைத்தோற் றத்தைப் போல்வனவேயாம்.

'வேனிறத் தியங்க வயவரா லேறுண்டு
கானிலங் கொள்ளா கலங்கிச் செவிசாய்த்து
மாநிலங் கூறு மறைகேட்ப போன்றவே' (௨க)

என்பது தற்குறிப்பு நயம் சிறந்து உள்ளது. யானைகள் பட்டுச் செவி ஒரு பாற் படிய நிலத்தின் வீழ்ந்து கிடந்தமை மாநிலமாகிய பெண்கூறுவதொரு மறைப்பொருளைச் செவிகொடுத்துக்கேட்பது போன்றது, என்னும் இதனுட் போந்த பொருண்மை மாற்றாரது தோல்வியையும் நன்கு புலனுறுத்துகின் றது. என்னை? நால்வகைப்படையினுள்ளும் யானைப்படை சிறப்புடைத்தாக வேண்டுவது தமிழ்வழக்கு என்பது 'யானையுடைய படைகாண்டல் முன்னினி தே' 'யானையில் மன்னரைக்காண்டல் கனியின்னா' என்பன முதலியவற்றால் அறியப்படுதலாலும், அவ்வியானைப்படையின் அழிவே மீண்டுக்கூறப்படுத லாலுமென்பது. ௨௦-ம் பாட்டில் 'எல்லாக் களிறுநிலஞ்சேர்ந்த' எனக்கூறிய வர் அக்களிறுகள்வீழ்ந்துகிடந்த இயல்பினை ௨க-ம் பாட்டில் புலப்படுத்தினர்.

இந்நூலில் தற்குறிப்புவமைகளும் இல்பொருளுவமைகளும் ஆண்டாண்டு வருவன உள. உவமைகள் பெரும்பாலும் வடிவுபற்றியும் தொழில்பற்றியும் வரும் உவமைகளாகும்.

'ஒழுக்குங் குருதி உழக்கித் தளர்வார்
இழுக்குங் களிற்றுக்கோ டூன்றியெழுவர்'

என்றாற்போலத் தன்மைநயம் சிறப்பவந்து போரைச் சிறப்பிப்பன செய்யுட் களும் சில உள.

நடைமரபு.

ஒவ்வொருமொழிக்கும் பலப்பலசொற்கள் உரிய உளவேனும், அவற்றை இடமறிந்து வழங்கல் அரிதாகும். ஒரேபொருளினவேனும் ஓரிடத்திற்கு உதவுவன சொற்கள் பிறவிடத்து உதவாதனவுமுள. அவை நூல்வழக்கு ஓர்ந்து உணரப்படும். அவை வழுவின் மரபு வழுவாம். ஒலித்தல், இரைதல், கத்துதல், ஆர்த்தல், பிளிறல் முதலியன ஒருவாறு பொருளொக்குமேனும், 'யானைஒலித்தது' எனல் மரபுவழுவாம். 'யானை பிளிறல்' என்பதே வழக்காதல் காண்க. இக்காலத்து ஆசிரியர் சிலர் இந்நெறியுணராது பலவிடத்தும் எழுதுவது தமிழ்மாண்பினையும் ஆற்றலையும் குறைப்பதாகும். நடைமரபினை உணர்ந்துகோடலே மொழிப்பயிற்சிக்கண் மாணக்கர் கடைப்பிடிக்கத் தக்கனவற்றுட் சிறந்தது. இலக்கண வழக்கினை அடிக்கொண்டதாகலின், அம்மரபின்கண் இலக்கணமெல்லாம் அமைந்து கிடத்தலை நன்மாணக்கர் உணர்வர். ஆகவே, நடைமரபு உணரின், ஏனை இலக்கணத்தினும் அவர் வழுவார் என்பது. களவழியில் இவை உளவழி சில காண்குதும்.

தொடர்.		மேற்கோள்.
ஆர்ப்பு எழுதல்	...	'ஆர்ப்பெழுந்த ஞாட்பு' (கஎ)
உரும் எறிதல்	...	'உருமெறிந்து' (சு) 'உருமெறி பாம்பு' (கரு, ௩அ)
உவணம் கவ்வல்	...	'ஐவாய் வயநாகங் கவ்வி, ... உவணம்' (உசு)
எஃகம் எறிதல்	...	'எறிந்த எஃகம்' (கசு)
கவளம் கோள்ளல்	...	'கவளம் கொள் யானை' (கசு)
காற்று எறிதல்	...	'காற்றுற்று எறிய' (உக)
சுற பிறழ்தல்	...	'சுற பிறழ்வ' (கூ)
தலை அவிழல்	...	'தலை யவிழுந் தார்' (கஅ)
பணை முழங்கல்	...	'பணை முழக்கு போர்த்தானை' (சo)
பெயல் பெய்தல்	...	'கார்ப்பெயல் பெய்தபின்' (உ)
மாக் கடவல்	...	'பரும வினமாக் கடவி' (கசு)
முரசு அதிரல்	...	'ஒழிமுரச......அதிரும்' (கக)
பண் அமைத்தல்	...	'சீர்முழாப் பண்ணமைப்பான்' (உo)
வாளை பிறழ்தல்	...	'வாளை பிறழ்வன' (௩௩)

இவற்றுட்பொருளொத்தன ஒருநெறிப்பட்ட மரபினை ஏற்றல் வழு வன்று. காற்று எறிதல் எனவே 'எறிதல்' என்பது காற்று என்னும் சொல் லிற்கு மட்டுமன்று, அப்பொருள்படவரும் வளி கால் முதலியனவற்றுக்கும் ஒக்குமென்பது. 'வளி எறிந்தது' 'கால்எறியும்' என்பனவும் வழுவல்ல என்ற வாறு. பணைமுழங்கல் முரசு முழங்கல், முரசு அதிர்தல் பணை அதிர்தல் என் பனவும் அன்ன. இனி, உருமெறிந்தது வீழ்ந்தது என்பதன்றிப் போட்டது, பட்டது என்பன வழுவாமென்க. மாக் கடவல் என்பது மாச் செலுத்தல் மா வூர்தல் மாத் தூண்டல் எனவரினும் இழுக்கன்று, அவ்வாறு கூறுமரபு முண்டாகலின். பிறவு மன்ன.

* குறிப்புச்சொற்றொடர்கள்.

குறிப்புச்சொற்களாவன இயல்பொருளுணர்த்தாது குறிப்பினால் வேறு பொருளுணர்த்துவன. முதற்குறிப்புத்தொகைக்குறிப்பு முதலியனபோலன்றி வழக்கினால் பொருள்வேறுபட்டு நிகழ்வனவற்றையே ஈண்டுக் குறிப்புச்சொற் கள் என்றும். ஆங்கிலநூலாரும் அவற்றையே குறிப்புச்சொற்கள் என்பர். குறிப்பிற் பொருளுணர்த்துந்தொடர்களும் உள. அவை குறிப்புத்தொடர்கள் எனப்படும். ஆங்கிலவாணர் சிலர் தமிழின்கண் குறிப்புத்தொடர்கள் இல எனப் பழிப்பர். பரந்த தமிழ்நூல்களைச் செவ்விதின் ஆயின், அன்னார் அவ் வாறு கூறார் என்பது தெளிவாம். மொழிநிகழ்தற்கண் உண்டாம் இயல்பு கள் எம்மொழிக்கண்ணும் உண்டாமென்பது அவ ரறியாதுபோயினமை வியக்கத்தக்கது. தமிழ்நூல்களின்கண் குறிப்புச்சொற்றொடர்கள் பலப்பல உள. அவற்றை இந்நாட் புலவர் நன்கனம் ஆளாக்குறையன்றித் தமிழுக்கு யாதும் குறையின்று என்பது உணரப்படல்வேண்டும். சில குறிப்புச்சொற் களும் தொடர்களும் இப்போழ்தும் பெருவழக்காக உள. கௗவழியிற் போந்தவற்றுட் சில ஈண்டுத் தருதும்.

குறிப்புச்சொல் தொடர்.	நேர் பொருள்.	குறிப்புப்பொருள்.	எண்.
நாண் ஞாயிறு	நாளில் தோன்றும் சூரியன்	விடியற்காலை	௧
குறைத்தல்	குறைவுசெய்தல்	வெட்டுதல்	௬
பண்ணமைத்தல்	இசையமைத்தல்	முழாச் சுதிகூட்டல்	௨௦
செய்யது	செவந்தது	செவ்வாடை	௩௨
கரைகோறல்	கரையைக்கொல்லுதல்	கரையழித்தல்	ருந

ஆகுபெயர் அன்மொழிகள் முதலியனவும் குறிப்பிற்பொருளுணர்த்தும். அவை ஆண்டு ஆண்டுக் காண்க. கைகூடல், கால்கோள், மீக்கூற்று, கடைக் கூடல் முதலியனவும் பிறநூல்களில் வரும் குறிப்புத்தொடர்கள்.

---

* ஆங்கில நூலார், இடியம் (Idiom) என்பர்.

புலவர்மரபு.

புலவர்மரபு உணராக்கால் நூற்பொருள் இனிது விளக்காது. அரசியலை ஆஞ்ஞாசக்கரம், திகிரியுருட்டடல், செங்கோல்செலுத்தல் என்றும்போல வருவன புலவர் மரபு. இதனைக் கவிசமயம் எனினும் ஒக்கும். புலவர்மரபு நூலிற்கே சிறந்துவரலின், நூல்வழக்கு எனத் தழுவப்படும். களவழியில் வரும் புலவர்மரபு சில:—

பகலவன் மேலைமலை (அஸ்தகிரி) யில் மறைவன் எனல்:-'இருவிசும்பிற் செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற'—ச. பகலோன் தோன்றுவதை உதயகிரி என்ப.

இராகு மதியைத்தீண்டல்:—'கோடுகொ ளொண்மதியை நக்கும் பாம்பு'. (உஉ)

நிலம் மதியை மறைப்பதால் சந்திரகிரகணம் உண்டாமென்பது இற்றை நாள் ஆராய்ச்சியாளர் துணிபாதலால், இதனைப் புலவர்மரபு என்றும், பௌராணிகம் எனினும் இழுக்காது.

உலகினைப் பெண் எனல்:—

'மையின் மாமேனி நிலமென்னும் நல்லவள்' (நஉ)

நிலம், இரவு, சோலை முதலியவற்றைப் பெண் எனல் புலவர்மரபு என்க. நிலத்தைப் பூதேவி எனல் பௌராணிகம் என்பது.

யாப்பு.

இந்நூலில்வரும் செய்யுளெல்லாம் வெண்பா யாப்பின. அவை நான்கு அடிமுதல் ஆறடி இறுதியாக வந்துள்ளவை. ஐந்தடியால்வந்தன க, உ, அ, கக, கஉ, கசு, கஎ, உக, உங, உச, உசு, நங, நரு, நசு, சக—என்னும் எண்ணின் பாடல்கள். சு—ம் உஉம்- உஅ-ம் ஆறடியால் வந்தன. ஏனைய நான்கு அடியான் வந்தன.

'வெள்ளைத்தொகை' 'அடிநிமிர்பில்லாச் செய்யுட்டொகுதி' என்பன கீழ்க்கணக்கிற்குரியவாகக் கூறப்படுதலின், கீழ்க்கணக்கின்பாலவாய் இந்நூலில்வரும் செய்யுட்களும், சொற்கள் வாளா பல்கலின்றிச் செறிந்தபொருளுடையனவாய் அமைந்துள. நாலடியினிகந்து வந்த செய்யுட்கள் பிறசில கீழ்க்கணக்கு நூல்களிலும் உள.

சிலஅடிகள் மோனையின்றியும் சில மோனை சிறப்பவும்வந்துள. எதுகை இரண்டாமடி முதற் சீரிலின்றேல், பெரும்பாலும் தன்னடி இறுதிச்சீரிடைக் கொண்டமைக்கப்பட்டுள்ளது. நான்காஞ்சீரில் எதுகை அமைப்பது திருக் குறணயமாகும். 'இருநிலஞ் சேர்ந்த குடைக்கீழ் வரி நுதல்' (உ௨) என்பது நோக்குக. 'இரு' எனற்கு 'வரி' என்பது இறுதிச்சீரில் எதுகையாயிற்று. 'நுணங்கிய கேள்வியரல்லார் வணங்கிய (வாயின ராதல் அரிது)' என்னுந் திருக்குறளிலும் இதுகாண்க. பண்டைத் தமிழ்நூல்களில் இத்தகைய எதுகைநயம் பெரிதும் பேணப்பட்டுள்ளது. திருக்குறளிற் பெரும்பாலும் இதுவே. இவ்வெதுகையும் இரண்டாஞ்சீர் எதுகைபெற்ற ஓசையின்பம் பயக்குமென்பது, அவ் எதுகையமைந்ததொரு பாட்டைப் பலதரமோதின் விளங்கும். முதலடி இறுதி இரண்டாமடி முதலோ டொத்தலின், இசை யின்பம் பெரிதும் இழுக்காது என்க. அதுபற்றியே முன்னைப்புலவர் இந் நயம் தழுவினர் என்பது கருதற்பாலதாம். இக்காலத்துப் புலவர் பலரும் தம் கருத்தைச் சிதைத்தேனும் இரண்டாமடி எதுகைக்குக் கையு முளமும் வருந்துகின்றனர்!

இந்நூலில் சிலபாடலில் முற்றடிகளும் எதுகைகொண்டு வந்தனவு முள. இனவெதுகைகளும் ஆண்டாண்டுக் காணப்படுகின்றன.

இடப்பெயர்கள்.

இந்நூலில்வரும் இடப்பெயர்களுட் சிறந்தனவற்றைமட்டும் ஈண்டுத் தருதும்.

அகராதிவரிசை.

கூடல் (கூ, கஅ) பௌவம் (௩எ)

கிரை (௩டு)

கழுமலம் - ஓர் ஊர் (௩சு)

களம் - போர்க்களம் (க-௪க)

கா - சோலை (உக)

காவிரி - ஓர் யாறு (எ, க௨, உ௪, ௩டு, ௩சு)

குளம் (உ)

குன்று - மலை (எ, அ, க0, கசு) மலை (௪, உக, உடு, ௩0) வரை (க௩, ௩டு.)

ஞாலம் - பூமி (உ, ௪0) *நிலம் (உக, ௩உ, ௪0, ௪௧) *பார் (உ௪) *மாநிலம் (௪௧)

தச்சன்பள்ளி – தச்சன் வேலைபுரியும் இடம் (௧௫)

திசை - திக்கு (௬, உ௧, ௩௭)

தோட்டம் (உ௪)

நாடு (௧-௩, ௭-௧0, ௧0, ௧உ, ௧௪, ௧௬, ௧௭, ௧௯, உ0, உஉ, உ௪, உ௫-உ௮, ௩௧, ௩உ, ௩௫-௩௭, ௩௯, ௪௧)

பொய்கை – தடாகம் (௩௩)

வஞ்சி - சேரநாட்டுத் தலைநகர் (௩௯)

வான் - ஆகாயம் (உ௩,உ௫) விசும்பு (௪, ௬, உ௬)

நிறப்பெயர்.

உ, ௪, ௫, ௭, ௧0, ௧உ, ௧௪, ௧௫, உ௧, உ௩, உ௯, ௩0, ௩உ, ௩௫, ௪0 என்னும் எண்களையுடைய செய்யுட்களில் செம்மை நிறமும் ௭-ம் செய்யுளில் கருமை நிறமும் ௩௧-ம் செய்யுளில் மின்னிறமும் ௪0-ம் செய்யுளில் வெண்மையும் சுட்டப்பட்டு உள்ளன. ஏழாம்பாட்டில் 'அஞ்சனக்குன்று' எனக்கருமையும் 'இங்குலிகக்குன்று' எனச்செம்மையும் சுட்டப்பட்டமை காண்க. அவை நிறப்பெயரல்லவேனும் நிறம்பற்றி ஆளப்பட்டமையின் ஈண்டு எடுத்தாளப் பெற்றன.

பகைவர்பெயர்.

'பகைவர்' என்னும் பொருளில்வரும் சொற்கள் பல இந்நூலகத்து வந்துள்ளன. அவையிற்றை ஈண்டுத் தருதல் மாணக்கருடைய சொல்லுணர்ச்சிக்கு மிகப்பயன்றருவதாம். அவற்றை ஒருபொருட் பல சொற்கள் எனக் கொள்க.

அகராதிவரிசை.

சொல்	பொருள்	பாட்டெண்
அடங்கார் ...	அமையாதவர் ...	௩0
ஒன்னூர் ...	ஒன்றூர் (பொருந்தாதவர்)	௩௧

*நிலம், பார், மாநிலம் என்பன ஞாலம் என்னும் பொருளில் நூற்கண் வந்த சொற்கள். பிறவுமிவ்வாறு காண்க.

காய்ந்தார் ... வெகுண்டவர் ... ௩௨

கூடார் ... பொருந்தாதார் ... ௧௨, ௨௨, ௪௧

செற்றார் ... வருத்தினவர் ... ௨௩

தப்பியார் ... பிழைத்தவர் (தவறிழைத்தவர்) ௧, ௫

தன்னார் ... சேராதவர் (கலவாதவர்) ... ௩௮

தெவ்(வர்) ... பகை(வர்) ... ௬, ௧௰, ௨௬, ௩௩, ௩௭

நண்ணார் ... சேராதவர் ... ௮, ௨௪, ௨௮

சேரார் ... உடம்படாதவர் ... ௧, ௨௰

பிழைத்தார் ... தவறுசெய்தவர் ... ௩

புல்லார் ... பொருந்தாதார் ... ௪

மாற்றார் ... மாறுபடுதலையுடையார் ... (வேறானவர்) ௩௬

மேவார் ... பொருந்தாதார் ... ௨௫, ௨௭, ௩௬

விலங்கு முதலிய.

யானை முதலிய விலங்குகளும், எருவை முதலிய பறவைகளும், வரால் முதலிய மீன்களும் முதலியனவாக இந்நூலுட் சுட்டப்படும் உயிர்களின் பெயர்கள் கீழே காட்டப்படுகின்றன.

விலங்கு.

1 யானை:–களிறு ௧, ௩, ௧௰, ௧௯, ௨௩, ௩௰, ௩௧, ௩௭, ௪௰. துஞ்சரம் ௧௬, ௨௫. யானை ௨, ௪, ௭, ௮, ௧௧, ௧௩, ௧௪, ௧௫, ௨௧, ௨௨, ௨௭, ௩௮. வேழம் ௧௨. உவா ௩௫.

2 குதிரை:—மா ௧௬, ௩௩, ௩௬.

3 சிங்கம்:—அரிமான் ௩௫.

4 நரி:—இகலன் ௨௮, நரி ௩௪.

5 கோனாய்:—௩௪.

6 வேங்கை (இரும்) புலி ௧௬.

7 பசு:—ஆ ௩௬.

பறவை.

1 காகம் (ரு) 2 துக்கில் (ரு) 3 சிரல் (ரு) 4 தரீஇ (அ) 5 எருவை (உ0) எருவைச்சேவல் (உசு) 6 உவணம் (உசு) 7 மயில் (உக).

இழைவன.

1 பாம்பு:—பாம்பு (கரு, உஉ, ருஅ) ஐவாய்நாகம் (உசு)
மீன்:—க. வரால் (எ) உ சுற (சு) ௩ வாளை (௩௩)

உறுப்புக்கள்.

கால் (க, கூ, உக, ௩அ, ௩கூ, சக) கை (கரு, கச, உரு, உஅ) தோள் (உச) மார்பு (சு, உக, ௩க, ௩அ, சக) முதுகு (ரு) நுதல் (உஉ, உ௩, ௩க, ௩0, ௩அ, சக) கண் (ரு, கக, கரு, உக, உச, உகூ, ௩0) வாய் (ரு, உசு, உஅ) செவி (சக) தலை (கஉ, உச, ௩ரு) என்பனவற்றுள் 'தலை' என்பது நீங்க ஏனைய மக்களுறுப்பிற்கும் விலங்கினுறுப்பிற்கும் ஆகக் கலந்துவந்த உறுப்பின் பெயர்கள். தலை, சென்னி என்பன (கஉ, ௩ரு) மலையின் மேற்பாகத்தைச் சுட்ட வந்தவை. உச-ம் பாட்டில் 'தலை' என்பது மறவர்தலை சுட்டிற்று.

களிற்றுக்கோடு (ரு, ககூ, ௩க, ௩எ) யானைக் தும்பம் (௩க) குதிரைச் சுவல் (௩௩) யானை எருத்து (௩அ) என்பன விலங்கின் உறுப்புக்கள். எருவைச் சிறகர் (உ0) சிறகு ஈர்க்கு (உ0)

புலால் (௩கூ) நெய்த்தோர் (உ௩, ௩எ) குருதி (க, உ, ௩, ரு, கஉ, கச, உ0, உஎ, ௩0) துடர் (௩ச) என்பன மக்களுக்கும் விலங்கிற்குமுரிய உடம்பின் அகத்துறுப்புக்கள்.

இச்சினைகட்கு முதலாக உள்ள உடம்பும் ஆண்டாண்டுச் சுட்டப்பட்டுள்ளது.

உடம்பு:
- உடம்பு—உ௩
- மேனி —௩உ
- உரு —ரு
- பிணம் —கூ, கரு, கஅ, ௩எ.

மரம் – செடி. பெண்ணை (உச) நெய்தல் (௩௩) பஞ்சி (௩கூ)

படைக்கருவிகள்.

பண்டைத் தண்டமிழ் நூல்களின்கண்வரும் படைக்கலன்களைக் காண் பார்க்கு, இக்காலத்து அஞ்சுதக ஏவுவன வியப்பைத் தாரா. முன்னையோர் போர்வீரத்தை அவராண்ட படைக்கலங்களும் சான்றாக நின்று காட்டற் பாலன. இந்நூலில்வரும் படைக்கலன்களாவன வாள் (க, கஅ, உஉ, உஅ, ரு) கணை (ரு, அ, க0 கஉ, உக, ச0) எஃகம் (ரு, கஉ, கசு, ருரு, ருச) கேடகம் (உஅ) என்பன. எஃகம்-வேல். வேல் என்னும் பெயராலேயே உக, உக, உரு, சக-ம் செய்யுட்களில் ஆளப்பட்டுஉள்ளது. வேல் என்னும் பொருளில் ருரு-ம் செய்யுளில் 'உடம்பிடி' என்னுஞ்சொல் வந்துளது. 'எஃகம்' வாள் என்னும் பொருளில் கரு-ம் பாட்டில் வருகின்றது.

இசைக்கருவிகள்.

முரசம் } முரசு—உ, ரு, அ, கக, உஉ, ருஉ, ருஎ, சுக.
பணை—ச0.
முழா—உ0.

பிறகருவிகள் (உபகரணங்கள்.)

முரசப்போர்வை:—போர்ப்பு 2.

தேர்:—உ, சு, உரு, ருரு.

தேர்ச்சிரம்:—ச.

மணி:—மணி சு, கசு. முத்து ருஎ. பவளம்:—துப்பு க. பவளம் சசு

பூண்:—பூண் சு, ருச. கழல் சு, ருஅ. பொன் ஆரம் ருஅ. பொன் சோடு சு.

பவளப்பை கசு.

குடை கச, உஉ, ருசு, ருஅ.

பருமம்;—கசு, ருஅ.

தோணி:—திமில் கஅ. அம்பி ருஎ.

வாளுறை:—தட்டு கஅ.

மாலை:—தார் கஅ. தெரியல் உச. கொடி உங, உரு, ருங.

கலம்:—மிடா உஎ. தாலம் (ஆலம்) ருங. கண்ணுடி உஅ.

யானையின் நெற்றிப்பட்டம்:—ஓடை ருக.

செவ்வந்தஆடை:—செய்யது ருஉ.

யானைத்தூண்:—கந்து ருச.

சங்கிலி:—தொடர் ருச.

கலப்பை:—நாஞ்சில் சo.

இவை சிறந்தன. பஞ்சி, அஞ்சனம், இங்குலிகம் முதலிய விடப்பட்டன. ருங-ம் பாட்டில் 'பஞ்சிபெய்தாலம்' என்பது பஞ்சிபெய்த ஆலம்எனப் பிரிக்கப்படுவது முண்டு. 'தாலம்' என்பதும் பாத்திரப்பெயராக வருதலின், யாம் தாலம் எனக்கொண்டாம்.

தொகைப்பொருள்.

இருசிறகர்:—கழுகின் இருசிறகுகள் (உo)

முக்கோடு—குத்திப்பட்ட வேலுடன் யானையின் இருகோடும் சேர்ந்து முக்கோடுபோலும் (கசு)

நாற்றிசை:—நாலுதிசைகள் (சு, உகூ)

ஐவாய்நாகம்:—ஐந்துவாய்களையுடைய பாம்பு (உகூ)

நாணூற்றிசை:—பதினாறுகோணதிசை (சு)

சொல்லாராய்ச்சி.

ஆடு:—வெற்றி; ஆடியல்யானை (உஉ) போரில் வெற்றியடைந்த வீரர் மகிழ்ந்து ஆடுதலின், 'ஆடு' என்பது வெற்றிப்பொருட்டாயிற்றுப் போலும். வென்றிக்கண் வீரர் ஆடுவர் என்பது தொல்காப்பியத்து 'களிற்றெறிந்தெதிர்ந்தோர் பாடுங் களிற்றொடு பட்டவேந்தனை யட்டவேந்தன் வாளோராடுமமலை, (புறத் எஉ) எனவும், வென்றகோமான்முன்றேர்க்குரவை' (ஷை எசு) எனவும் வருதலான் உணரப்படும். 'ஆடுதுவன்று விழவின்' (மதுரைக் சஉஎ—அ) 'ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்' (புறநா உக) என்பவற்றினும் வெற்றிப்பொருட்டாதல் காண்க.

உருவம்:—அச்சம் 'உருவக்கடுந்தேர்' ௪. 'உரு' உட்காகும் எனத் தொல்காப்பியத்துக் கூறப்பட்டது. இது தமிழ்ச்சொல். 'உரு' என்பது 'அம்' எனும் பகுதிப்பொருள் விகுதிபெற்று நின்றது. வடிவம் என்னும் பொருளில் 'உரு' என்பது வடசொல்; ரூபம் என்னும் வடசொற்சிதைவெனக்கொள்க. 'உருகெழு குமரி' (புறநா ௬) என்பதினும் உரு, உட்கு எனும் பொருளில் வந்தது.

கொற்றம்:—வெற்றி 'கொற்றவேற்றூனே'—உ௩. வென்றிக்கண்ணெல்லாம் கொற்றமெனல் சாலாது. 'தேர்வில் கொற்றங்கொண்டான்' எனல் வழுவாமென்க. பிறரைக் கொன்று அடையும் வெற்றியே கொற்றமெனப்படும். பொதுவாக அரசர்க்கும் வீரர்க்குமே இச்சொல் வென்றிக்கட் கூறப்படும். 'கொல்' என்னுஞ்சொல்லடியாகப் பிறந்தசொல் கொற்றம் எனக் கொள்க. சொல்+அம் எனப்பிரிக்கப்படும்; லகரம் றகரமானது விகாரம். பகுதியீற்று லகரம் மூன் உயிர்வருமிடத்து றகரமாகத்திரிதலுமுண்டென்பது, சற்றூன் விற்றூன் என்பவற்றினும் காண்க. கொல்+ற்(த்) அம் எனப் பிரித்து தகரம் எழுத்துப்பேறெனக்கொள்வாருமுளர். மயக்கவிதியில்லாவிடத்து எழுத்துப்பேறு கொள்வதன்றிப் பிறவிடத்து வேண்டா. லகரத்தின் மேல் அகரவுயிரேறி முடிதற்கு 'உடன்மே லுயிர் வந்து ஒன்றுவதியல்பே' என்பது விதியாகலின், அது ஈண்டைக்கு ஏலாது. நோல்+அல் நோற்றல் எனவருவதும் காண்க. நோல்+தல் எனின், நோறல் என்றே முடிதல்வேண்டுமென்க. கொல்என்பதன் லகரம்ஓசைவலிநோக்கி றகரமாகத் திரிந்ததாகல்வேண்டும். 'வேள்விமுற்றிய வென்றடுகொற்றத்து' என்பதனுள் வெற்றியுற்றுக் கொன்று எய்திய கொற்றம் எனும் பொருள்பட வந்தது காண்க.

செக்கர்:—செம்மை நிறம்; 'செக்சர் கொள் வான்' உ௩. இச்சொல் செம்மை என்னும் பண்படியாப் பிறந்தது. 'ஈறுபோதல்' எனுந் தொடக்கத்து நன்னூல்சூத்திரத்து 'ஈறுபோதலும்' திரிதலும் பெற்று 'அர்' என்னும் பகுதிப்பொருள்விகுதி ஏற்று நின்றது. 'செக்கர்' என்பது சிலவிடத்து ஆகுபெயரால் செவ்வானத்தைக் குறித்தலுமுண்டு. 'செக்கானன சிவந்த நுணங்குரு' மதுரைக். ௫௩௨ என்பது காண்க.

நல்லவள்:—பெண்; 'நிலமென்னு நல்லவள்' ௩௨. 'நல்லார்' என்பது பெண்கட்கு ஒருபெயர். 'நிலமென்னு நல்லாள்' எனத் திருக்குறளில் (௧0௪-௧0) வருவதும் காண்க. நலம் என்னுஞ் சொல்லடியாகப் பிறந்தது இப்பெயர். நலம்—அழகு. 'நலத்தகையார் நாணுமை இன்னு' (இன்னு ௨0) எனவருவது காண்க. காரிகை தையல் என்பனவும் அழகுபற்றிப் பெண்கட்கு வழங்கும் பெயர்கள்.

வடசொல் வழக்கு.

	வடசொல்		வடமொழிவடிவு
1.	அஞ்சனம் - மை—எ	...	அஞ்ஜநம் [1]ந. [2]ஏ
2.	அரவம் - ஒலி—கக	...	ரவ: பு. ஏ.
3	அரி - சிங்கம்—கரு	...	ஹரி: [3]பு. ஏ.
4	ஆரம் - மாலை—கஅ	...	ஹார: பு. ஏ.
5	உரு - வடிவு—ரு	...	ரூபம் ந. ஏ.
6	கவளம் - உருளை—கச	...	கவல: பு. ஏ.
7	காவிரி - ஓர்யாறு—எ, கஉ, உச, உரு, உக.		காவேரீ ஸ்த்ரீ. ஏ.
8	குஞ்சரம் - யானை—கசு	...	குஞ்ஜர: பு. ஏ.
9	கும்பம் - மத்தகம்—கக	...	கும்ப: பு. ஏ.
10	கோங்கர்—கச	...	கௌங்கா: பு. [4]ப.
11	திசை - திக்கு—சு	...	திஶா - [5]ஸ்த்ரீ. ஏ. ஈற்றாகாரம் ஐகாரமாயிற்று. 'மாலா' மாலை என வருவது காண்க. திஶ: என்பது பன்மை.
12	பரிதி - சக்கரம்—ச	...	பரிதி: பு. ஏ.
13	பவளம்—கச	...	ப்ரவாளம் ந. ஏ.
14	மணி-இரத்தினம்-சு, கக.		மணி: பு. ஏ.
15	முரசு - மத்தளம் — உ, ரு, அ, கக.		முரஜ: பு. ஏ.

[1] ந-நபுஞ்சகலிங்கம் (அஃறிணை) [2] ஏ-ஏகவசநம் (ஒருமை) [3] பு-புல்லிங்கம் (ஆண்பால்) [4] ப-பகுவசனம் (பன்மை) [5] ஸ்த்ரீ-ஸ்திரீலிங்கம் (பெண்பால்)

வடசொல்வழக்கு மேற்கோள்.

1 'கன்னிப லஞ்சனம்'—கார்-அ
2 'இரைதேராவம்'—குறிஞ்சிப்பாட்டு-உ௫௫
3 'அரிமான் வழங்குஞ்சாரல்'—பதிற். உ-௪-எ
4 'ஆரமார்பு'—பதிற். உ-க-கரு
5 'உருவறக்கெடுத்து'—பதிற். உ-ரு-எ
6 'கவளக் களிற்றண்ணல்'—திருக்கோவை. ௯௯
7 'மலைத்தலைய கடற்காவிரி'—பட்டினப். ௬
8 'மணியிலாக்குஞ்சரம்'—இன்னா.
9 'துங்கமத கும்பவுயர் கும்பமுகர்'—திருவாதவூரர் புராணம். கடவாழ் ௪.
10 'கங்கர்கொங்கர்தெலுங்கர்'—வில்லிபா. கரு
11 'முன்னிய திசை'—மலைபடு. ௬௪
12 'பரிதிவலவ'—பரிபாடல். ௯
13 'பவழுஞ் சிதறியவைபோலக்கோபம் தவழுந் தகைய புறவு'—கார். ரு
14 'திருமணி'—மலைபடு. ருகரு
15 'மண்ணுறு முரசம்'—பதிற். உ-௯-எ

தமிழ்ச்சொல் எனவும் கொள்ளத்தக்கன சில, வடமொழிவழக்குப்பெற்று நிகழ்ந, விடப்பட்டன. பரிதி என்பது ஆகுபெயராய்ச் சக்கரத்தைக் குறித்ததென்க. பரிதி-சுற்றளவு. 'கொங்கர்' என்பதைத் திசைச்சொல்லாகக் கொள்வது சிறப்பு. 'இங்குலிகம்' என்பது வடசொல்லாகத் தோன்றவில்லை. இங்குதீ எனப் பிரயோகம். அது 'உடல்' என ஒரு மரத்தைக் குறிக்கிறது. வடசொல்லாயின், அறிஞர் இதனை விளக்கும்படி கேட்கிறோம்.

அருஞ்சொல்லகராதி.

அடர்—தகடு 34
அம்பி—தோணி 37
அரிமான்—சிங்கம் 35
ஆடு—வெற்றி 22
இகலன்—ஒரி 28.
இங்க—அழுந்த மூழ்க 42
இங்குலிகம்—சாதிலிங்கம் 7
இணரிய—சேர்ந்த, செறிந்த 34
ஈண்டி—கூடி 27
உடம்பிடி—வேல் 35
உாறி—முழங்கி 6
உருத்து—கோபித்து 28
உரும்—இடி 13, 35, 38.
உருவம்—உட்கு 4 'உரு' என்னும் சொல் திரிந்து நின்றது. 'உரு உட்காகும்'—தோல்.
உவணம்—கருடன் 26
உவா—யானை 35
உழக்கி—கலக்கி 3
எழில்—எழுச்சி 21
ஐது—அழகிதாக, வியப்பிற்குரக 33
ஒல்கி—தளர்ந்து, 12, 35.
கடி—மணம் 29
கழுமிய—கலந்த 11
கா—சோலை—29
காளாம்பி—காளான் 36
குஞ்சரம்—யானை 16, 25.
கேடகம்—பரிசை 28
கேளிர்—கணவர் 29
கொண்மூ—மேகம் 23
கோடு—கரை 2. கொம்பு-3, 31, 37. பக்கம்-22.
சாறு—விழா 17.
சுவல்—பிடர் 33
செக்கர்—செம்மை நிறம் 23
செய்யது—சிவந்த ஆடை 32
செரு—போர் 1, 38.
செற்றம்—பகை 23
ஞாட்பு—போர் 2, 97, 28, 34, 39.
ஞாலம்—பூமி 2
தடறு—உறை 18
தளை—கட்டு 18
திரவு—உறுதி, வலி. 20
துணிப்ப—துண்டுபடுத்த 22
துப்பு—பவளம் 1
தொக்கு—கூடி, திரண்டு. 27
தொன்மை—பழமை 21
நளிந்த—செறிந்த, அகன்ற 18
நாஞ்சில்—கலப்பை 40
நாண்ஞாயிறு—விடியற்காலை 1
நிறம்—மார்பு 41
நுதல்—நெற்றி 22
நூற—வெட்ட 13
நெய்த்தோர்—உதிரம் 23, 37.
பருமம்—யானை குதிரைகளின்மேல் இடுந் தவிசு 16, 38.
பாடு—ஒலி 22, 41.
பீடு—பெருமை 28
புயல்—மேகம் 12
புரை—ஒத்த 13
பெண்ணை—பனை 6
பொங்குபு—பொங்கி 25
போர்ப்பு—போர்வை 2
பௌவம்—கடல் 37
மங்குல்—இருள், கருநிறம் 11
மயங்கிய—கலந்த 39
மருப்பு—யானைக்கொம்பு 19
மா—குதிரை 33, 35.
மிடா—வாயகன்றபாத்திரம் 27
மிளிரும்—விளங்கும் 31
முருக்கி—அழித்து 15
முழா—முரசவிசேடம் 20
மை—குற்றம் 32
மைந்து—வலிமை 11, 39.
மொய்ம்பு—வலிமை 38
வயவர்—வீரர் 13, 23, 26.
வரை—மலை 25
வாய்—இடம் 8, 15, 26, 33.
விளிந்தார்—இறந்தார் 18
விற்று விற்று—வேறு வேறு 29
வெடி—அச்சம் 29-

"பிறபாஷைகளில் இல்லாத பல்வேறுவகையான பாடல்களை யும் பிரபந்தங்களையும் உடையதாய்ச் செய்யுள்நடையில் சிறந்து விளங்கும் தமிழ்மொழிக்கண்ணே செய்யுளுக்கின்றியமையாத பொருள் யாப்பிலக்கணங்கள் பிறிதொருபாஷையிலிருந்து கொள்ளப் பெறாது தமிழுக்குரியவாய்த் தனியே சுயமாயிருக்கும்போது அவற்றோடொத்த அணியிலக்கணப் பகுதிமட்டும் அந்நியபாஷையிலிருந்து வந்ததாகச்சொல்வது அநாதரிக்கத்தக்கதே." (மாறனலங்கார முகவுரை.)

மேற்கூறிய அதேகருத்தை இன்னும் சிறிது முன்னேறிச் சென்று, தமிழுக்கேயுரிய தனிச்சிறப்பையும், வடமொழியைக் காட்டிலும் தமிழில் 'அணி' அதிகத்திறமையுடன் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் விளக்குவதே இக்கட்டுரையின் கருத்து.

சப்தாலங்காரம் (சொல்லணி) இருமொழிகளிலும் உள்ளது. ஆயினும் அவ்விருமொழிகளிலும் அது அவ்வளவு ஆராய்ச்சிக்குட்படவில்லை. அர்த்தாலங்காரம் (பொருளணி) தான் எண்ணில் மிகுந்தும், வகைகளில் பெருகியும் வளர்ந்திருக்கிறது இருமொழிகளிலும்.

தண்டியலங்காரமும் வீரசோழியமும் வடமொழிப் பண்பிலேயே தோய்ந்தன. அவற்றின் வம்சத்தனவே மாறனலங்காரம், முத்துவீரியம் முதலியன. ஆதலின் அநாதிவேதம்போல் நிற்கும் தமிழர் தம் தவச்செல்வமாகிய தொல்காப்பியத்தை ஆராய்ந்து தான் உண்மைகாணவேண்டும்.

"எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணி"

என்பது பனம்பாரனார் பாயிரம். யாப்பும் அணியும் பொருள்தான் என்பதே பழையகொள்கை. பிற்காலத்தில்தான் அவை தனியியலாக்கப்பட்டன. ஆசிரியர் தொல்காப்பியர் பொருள் அதிகாரத்தில் அகமும் புறமும் விளக்கி, அதற்குச் சார்புடையதாய் மெய்ப்பாட்டைக் கூறத்தொடங்கி, நாடகஇலக்கணம் கூறுவார்போல்,

"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்" என்கிருர். நாட்டியத்திலே தோன்றும் ஸாத்விகபாவங்கள் முப்பத்திரண்டு என்று மெய்ப்பாடுகளை இலக்கணநூலில் கூறுவதென்னை? எனின், வல்லோர் செய்யும் செய்யுளின் பயன்யாது? இன்பம். அதனைச் சுவைக்கவன்ருே செய்யுள் எழுந்ததும், அதை நாம் பயில்வதும். ஆகவே இலக்கிய இன்பம்பற்றியே மெய்ப்பாடு இலக்கணத்திலடங்கியது.

அகமும் புறமும், "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறிவழக்க"மல்லவா? இனி, செய்யுளின் பொருள்கூறிய ஆசிரியர் அப்பொருளை அழகுபடுத்தும் உவமத்தைக் கூறுகிருர்.

"வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்"

என்று சூத்திரம்செய்து பொருளின் மெய்ப்பாடு செவ்வனே நிகழ, மற்ருென்றின் தொழிலும், பயனும், வடிவமும், வண்ணமும் பற்றி வந்த உவமை உதவும் என்று கருதுகிருர்.

செய்யுளுக்குமுக்கியம் பொருளே ஆயினும்; உவமையால் அது அழகடைவதும் அவருக்குடன்பாடு. ஆகவே அணியியல் விதந்து கூருராயினும் அது அவருக்குத்தெரிந்ததே. முதல்நூல்களிலும் அஃது இருந்திருக்கவேண்டும்.

இனி, முதற்கண்கூறிய "உவமையே எல்லா அணிகளும்" என்ற கொள்கையை மிகப்பழைய காலத்திலேயே தொல்காப்பியர் நிலைநாட்டினூர் என்பதைப் பார்ப்போம்.

வினைமுதலியவற்ருல் ஒப்புமைகூறுவதும் பொருளுக்குரிய இலக்கணம் எனத் தொடங்கி, "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை" என உவமேயமானபொருளுக் குவமைதரும் மற்ருென்று உயர்ந்ததேயாதல் வேண்டும் எனக் கருதியவர், உவமை நிலைக்களன் கூறுகிருர். அதாவது அவை அவ்வாறு உவமிக்கப்படுவதன் காரணம், (உவமையின்) சிறப்பும், நலனும், வலிமையும் காதலும்

முதலியபோன்ற ஒத்தபண்புகள். பிறகு "கிழக்கிடு பொருளோடு ஐந்துமாகும்" என்றுபொருளின் தாழ்மையையும் சேர்க்கிறார். உரையாசிரியர்கள் வேறுவகையாகப் பொருள்கொள்வர் இச்சூத்திரத்திற்கு. அவர்களுடைய கருத்தைப் பின்பற்றிச் சிறிது புதியதொரு பொருளும் கொள்ளலாமென்பது சிற்றறிவினேன் கருத்து. கிழக்கிடு பொருளாவது தாழ்த்தப்பட்டதொரு பொருள். அது நிலைக்களனாக உவமைவருவதாவது, சிறப்பிக்கும் ஒரு பொருளை மேலும் உயர்த்தவேண்டி உவமப்பொருளைத் தாழ்த்துதல்,

> "மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
> காதலை வாழி மதி"

மதியே! என்காதலியின் முகம்போல் விளங்குவாயானால் நீயும் விரும்பத் தக்காய் என்னசெய்வது? என்பது உதாரணம். மேற்சூத்திரம் செய்தார்க்கு "பிரதீபம்" உடன்பாடன்றோ?

"சுட்டிக் கூறு உவமம் ஆயின், பொருள்எதிர்புணர்த்துப் புணர்ந்தன கொளலே" அதாவது உவமையிலும் வருணிக்கப்படும் பொருளிலும் உள்ள ஒத்தபண்புகளை, இவை, இன்ன என்று கூறுவிடினும் சம்பந்தம் பற்றியும் உவமை வரும்; என்கிறவர்க்கு எடுத்துக்காட்டும், பிறிதுபுகழ்தலும் உடன்பாடன்றோ?

இனி, தொல்காப்பியர் தரும் உவமஉருபுகளை ஆராய்வாருக்குத் தற்குறிப்பேற்றம், உருவகம், பிராந்தி முதலிய யாவும் அவர் கருத்தில் உவமை ஆவது நன்கு புலனாகும். ஆதலால் உவமையை ஆராய்ந்து அது ஒன்றே பலதிறப்பட்டதாய்ப் பொருளை அழகுபடுத்தி ரஸிகர்களை மகிழ்விக்கிறது என்பது மிகப்பழைய தமிழ் மதம் என்றுகொள்வது ஏற்புடையதாகும். அத்துடன், அவ்வணிகள் மிக அழகுடன் கையாளப்பட்டு அன்றுமுதல் இன்றுவரை செழுமையுற்றிருக்கின்றன.

ஆனாலும், உவமையும் அதன் திறங்களான மற்ற அணிகளும் வடமொழியைக்காட்டிலும் முற்றிலும் வேறுபட்ட அழகை அடைந்திருக்கின்றன தென்மொழியில்; என்பதைச் சிறிதுகாண்போம்.

"அலங்காரமாவது கூறும் பொருளை விளக்கவும், அழகு பெறச்செய்யுவும் தான்" என்ற முடிவு ஊன்றிவிட்டது வடமொழியில். ஆகவே அதற்கும் மேல், த்வனி என்று ஒன்று உண்டு என்றும் அதுவே செய்யுளின் ஆத்மா என்றும் கூறி, த்வனியிலும் ஏதேனும் ஒரு பொருளோ, ஒரு அணியோ குறிப்பாய்த் தோன்றுவதைவிட ரஸம் (அதாவது மெய்ப்பாடு) உணர்த்துவதே உயர்ந்தது என்று கொண்டுவிட்டார்கள். ஆகையால்தான் யாதொரு அணியுமின்றி செய்யுளில் உயர்ந்த இன்பம் தோன்றலாம், என்று முடிவுகட்டி விட்டார்கள்.

தமிழர்முடிவு இதற்கு முற்றிலும் மாறுபட்டது. ஆதியிலிருந்து இன்று வரை அணியும் மெய்ப்பாடும் முக்கியப்பொருளோடு இணைந்தே சுருதியும் லயமும் இசையோடிணைவதுபோல் அழகுதருவது என்பதே தமிழர் முடிவு. இதனைவிளக்கச் சிறிது தொல்காப்பியத்தில் ஆராய்வோம்.

எழுத்தும் சொல்லும் உணர்த்திய ஆசிரியர், இலக்கியமுணர்த்தத் தொடங்கிப் பொருள் கூறினர். பொருளாவது பாஷையின் ஸாமான்யப்பிரயோஜனமாகிய வழக்காறு அல்லவே? ஆயின் அதற்கு இலக்கணத்தேவையின்றே? என்ற மாபாடியக்கருத்துப் போல இலக்கியம்தானே பாஷையின் உயர்வு; ஆகவே அதன் பொருளுக்கே இலக்கணம்.

இலக்கியமாவது அறம் பொருள் இன்பங்களைக் கூறி, அதன் வழியே வீட்டையுணர்த்தும் வல்லோர் நூல்கள். அதனால்தான் ஆசிரியர் தொல்காப்பியர் அகிலமும் அடங்கும்படி முதல், உரி, கருப்பொருள்களைப் பகுத்துக்கொண்டு அகம்,புறம் இரண்டனுள்ளும் புருஷார்த்தங்களை விளக்கும் முறையில், பொருள் அதிகாரம் எழுதத்தொடங்கினர்.

அறமும் பொருளும் அமைந்த உயர்வால் பிறக்குமின்பத்தை இடமாகக்கொண்ட அகப்பொருளை, எக்காலத்தும் எத்தேசத்தும் மக்கள் வாழ்க்கையில் எவ்வகையானும் உயர்ந்த இடத்தைப்பெற்ற காமத்தை, உணர்த்த ஆரம்பித்த ஆசிரியர் அதனை நாடகவழக்கும்

உலகியல் வழக்கும் கலந்து விளக்கினர். செய்யுளில் இன்பம் கிளைத்தொழுகும்படி இவற்றை அமைக்கவேண்டிய, அல்லது இவை அமைந்திருக்கிற, முறையை எடுத்துரைப்பவர் பல நுண்ணிய விஷயங்களுடன் உவமத்தையும், முன்கூறிய முறையில் எல்லா அணிகளையும், புகுத்தியிருக்கிறார். சிறிது ஆராயின் இது தமிழுக்கே தனிச்சிறப்பாகின்றமை புலப்படும்.

"உள்ளுறை உவமம் ஏனை உவமம்எனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே"

திணையாவது ஒழுக்கம். அதை உணர்தலாவது கூறப்படும் ஒழுக்கத்தின் நிகழ்ச்சியின் மெய்ப்பாடு அறிதல். அது தப்பாதாகும், முக்கியமாகும். எங்கு? செய்யுளில். எவற்றால்? உவமைகளால் அவை யாவை? உள்ளுறை உவமும் ஏனையுவமும். உள்ளுறை உவமமாவது:—

"கருப்பொருளுடன்—அதாவது செய்யுளில் எவரைப்பற்றி எக்காலத்தில், எந்த இடத்தில், எச்செயல் கூறப்படுகிறது என்பதை அறிவிக்கும் பொருள்களுடன்—குறிப்புவகையில் த்வனிக்கும்படி மறைந்திருக்கும் உவமை. ஏனை உவமமாவது ஆங்கு வினை, பயன் முதலியவற்றால் வருவது. இவ்விரண்டினாலும் இன்பம் தோன்றக் கூறவேண்டும், கூறும்பொருளை"; என்பது கருத்து.

புறத்தொழுகிய தலைமகன் திரும்பிவந்து, யான் இவ்வாறு பிரிந்திருந்தகாலத்து நீங்கள் என்னநினைத்தீர்கள்? என்று பன்மையில் கேட்டான் தலைமகள் தோழியை. அவள் கூறுகிறாள்:—

தெய்வத்தைப் பிரார்த்திக்கும் அன்னை, அரசன் வாழவும், பகைவர் ஒடுங்கவும், பார்ப்பார் களிக்கவும் வேண்டிக்கொண்டாள்; அப்பொழுது நாங்கள்,

"பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்
கழனி யூரன் மார்பு
பழனம் ஆகற்க என வேட்டோமே"—என்று,

பூத்து விளங்கும் கரும்பும், விளைந்து மண்டிக்கிடக்கும் நெல்லும் நிறைந்த வரையுடைய உன்னுடைய பரந்தமார்பு பொதுவான

பழனம் ஆகாதிருக்கவேண்டும்; என்று வேண்டிக்கொண்டோம்: என்பது கருத்து.

இங்கு உள்ளுறை:— "பயனின்றிப்பூத்த கரும்பும் உளது, உன்னூரில்; நெல்லு முளது; மக்கள்பயந்து மாக்கடன் தீர்ந்துக் குலவிளக்கேற்றும் குலமகளிரு முளர்; அப்பெருமை பெறாத பரத்தையரு முண்டு; நீ பரத்தையைப் புணர்ந்தாய்; அஃதாற்றாள் என் தலைவி"; என்ற தோழியின் கருத்து த்வனிக்கின்றது.

உவமை, கூறும் சொற்களை அழகுபடுத்துவது மாத்திரமல்ல; அதுதான், திணையொழுக்கத்தையும் மெய்ப்பாட்டையும் கேட்போர் மனத்துப் புகுத்திச் சுவையின் உச்சத்தை அடைவிக்கின்றது; என்பது தமிழ்க்கலை. நிற்க.

வடமொழியில் தொனிமதம் நிறுவிய ஆனந்தவர்த்தனர் எந்த இன்பம்வேண்டி அதைக்கூறினரோ, அதைத் தொல்காப்பியர் மிக எளியமுறையில், அணியிலிருந்து பிரிக்காமலேயே கூறுகிறார்; என்பதைக் காண்போம்.

சொல்லெச்சமும், குறிப்பெச்சமும் கூறுகிறார் தொல்காப்பியர். இன்னசொல்லிற்கு இதுபொருள் என்று அறிதல் யாற்றொழுக்கு. அதுவன்றி, ஒப்புமையும் சம்பந்தமும் மற்றும் பல தன்மைகளும் உளவாகலின் சொற்களுக்குப் பொருள்காணுவதில் இயல்பான தன்றிப் பிறிதுகுறிக்கும், ஆகுபெயரிலக்கணம் நாமறிந்ததே.

குறிப்பால் பொருள்உணர்தல் மேற்கூறிய இரண்டையும் விட வுயர்ந்ததே. அதிக இன்பம் பயப்பதும் அதுதான். வல்லோர் அணிபெறச்செய்த செய்யுள்களின் பெருமையும் அது தான்.

இக்குறிப்புத்தான் இயல்பாகிய பொருளை விட்டுத் தனியே சிறப்புடையதாய்த் தோன்றும்பொழுது த்வனி எனப்படுகிறது ஆனந்தவர்த்தனரால். தொடர்ந்தமைந்தமை சொற்களின் பொருளறிவு வாக்கியத்தின் பொருளறியக் கருவியாகின்றது. அது போலவே வாக்கியத்தின் பொருள், குறிப்புப்பொருள் அறியக் கருவியாகும். அணிகளிலும் ஓர் பொருள் குறிப்பால் தெரிகின்றது ஆயினும் அவற்றின்முடிவு வாக்கியத்தின் கருத்துடனேயே நின்று

விடும். அதற்கும் மேல் ஒரு பொருள் உண்டு. அதுதான் த்வனி என்று முடிவுகட்டிப் பிறகு, யாதொரு அணியும் இல்லாமல்கூட, த்வனியால் உயர்ந்த மெய்ப்பாடுகள் நிகழும் என்கிறார் அவர்.

இனி, இதையே தொல்காப்பியர் கூறும் வழியிற்சென்று காண முயல்வோமானால் அணியிலிருந்து பிரிக்காமலேயே அதை அவர் கூறுவது புலப்படும்.

ஆசிரியர், பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியலில், வல்லோர் செய்யுளின் பொருளில் அமைந்த மெய்ப்பாடுகளை எடுத்துரைத்து அதற்குப்பின் மெய்ப்பாடு உணர்த்தவரும் உவமத்தை விளக்க உவமவியல் செய்தனர். உவமம்என்று எல்லா அணிகளையும் தழுவிக்கொண்டு, அவை மெய்ப்பாட்டை வலியுறுத்தவேண்டிக் குறிப்பிட்ட நிலைக்களன்களில் வரும் என்று பேசுகிறார். உவமை யாவது என்ன? ஒன்று மற்றொன்றின் பண்போடு பெரும்பாலும் ஒத்திருக்கும்தன்மை, எனவே ஒன்றின் பெருமையும் ஒன்றன் சிறுமையும் புலனாகின்றது. பெருமையும் சிறுமையும் கூறுவார் கருத்துப்போல் அமைதலின், மரபுபற்றி அதையறியவேண்டும் என்பது அவர்கருத்து. நிற்க, உவமை தோன்றும் இடத்தைக் கூறும் ஆசிரியர் "மெய்ப்பாடு எட்டின் வழிமருங்கு அறியத்தோன்றும்" என்கிறார். ஆகவே உவமை, தான் அமைந்த வாக்கியத்தின் கருததளவே நில்லாமல், மேலும் சென்று மெய்ப்பாட்டை வலியுறுத்துகிறது; என்று வெட்டவெளிச்சமாய் அணியையும் மெய்ப்பாட்டையும் இணைக்கின்றார் அவர்.

காதற்பரத்தை ஒருத்தி, தெருவில் விளையாடும் தன்தலைவன் மகனைக்கண்டு (ஒப்புமையால்) மகிழாநின்றாள். அப்பொழுது வாசற் கதவில் மறைந்திருந்த தலைவி, தன் மகனைக்கண்டு மகிழ்ந்து நிற்கும் அவளைத் தெரிந்துகொண்டு "நீயும் தாய்தான் அம்மா அவனுக்கு" என்கிறாள்.

அப்பொழுது தலைகுனிந்து, நிலத்தைக் காலால் கிறிக்கொண்டு நிற்கும் பரத்தையின்நிலையை, நாணமும் நகையும் மற்றும்சில நுண்ணிய மெய்ப்பாடுகளுமுடைய நிலையை, உவமைதந்து விளக்குகின்றது பாட்டு. "களவு உடம்படுநரின் கவிழ்ந்து நிலம் கிளையா" தான் செய்த திருட்டை ஒப்புக்கொள்கிறவர் போல் என்று. இது கட்புலனுக்குக் குறைவானஇடம் — முற்றிலும் மனத்தால் அறியும் ஓர் உயர்ந்த உணர்ச்சி—அணியுடன்கலந்து எவ்வாறு உருவாகின்றது என்பதை வாசகர்களே ஊகிக்கவேண்டும். இதுபோல் பல்லாயிரம் உள. தொல்காப்பியர் உவமத்தையும் மெய்ப்பாட்டடனே இணைத்துக் கூறிய பெருமைதான் இது. த்வனிநூலில் அத்யத்புதமாய்க் கொண்டாடப்படும் எந்த சுலோகமும் இதை நிகர்க்கவில்லை.

ஆசிரியர் தொல்காப்பியர், அகப்பொருளில் தலைவன், தலைவியிருவர்களுடைய காமவெளியீட்டு முறையைக் கூறுகிறார். தலைவனும் தலைவியும் மெய்ப்பாடு விளங்கும்படி நெஞ்சொடு கூறுவர், என்றுகூறி, நெஞ்சை உறுப்புடையதுபோலவும், உணர்வுடையது போலவும், மறுத்துரைப்பதுபோலவும் கூறுவதுண்டு எனவும், உவமத்தின் மூலம், பேசாதவற்றுடனும், தொழில் ஒன்றும் செய்யாதவற்றுடனும், அறிவையும் புலனையும் வேறுநிறுத்தித் தம் மனநிலையைக்கூறுவார் எனவும் சொல்கிறார்.

ஆகவே அவர் பொருள்முழுதும் த்வனியாகவே பேசுகிறார் என்பது புலனாகிறது. மற்றும், குறிப்புக்கூறும் இடத்திலெல்லாம் உவமத்தை அவர்முக்கியமாகக்கொள்வது காவ்யத்தில் த்வனியைக் காட்டிலும் முக்கியம் எனக்கூடிய, சுற்றுவாடைஅமைக்கும் திறத்தில், தமிழுக்கேயுரிய தனிச்சிறப்பைக் காட்டுகின்றது. அவர் கொள்கையைப் பின்பற்றிய சங்கநூல்களிலுள்ள ஒவ்வொரு பாட்டும் தன்னளவில் ஓர் அரிய காவ்யமாம்படி நிற்கின்றது.

மேலும், நாணம், அச்சம் முதலியவற்றை உயிர்எனக்கொண்ட தலைவி, களவில்-அதாவது இன்பக்கடல்போன்ற காந்தருவத்தில்-தன்கருத்தைத் தான்எடுத்துரைத்தல் கிடையாதெனக் கொண்டார்கள் ரஸிகசிகாமணிகளான தமிழர்கள். தலைவி சிலவிடங்களில் குறிப்பால் தன்கருத்தை வெளியிடும் முறைகளைத் தமிழ்ப்புலவர்

கையாளும்பொழுது, த்வனி எங்குமே காணுத அளவில் காணப்படு கின்றது.

"நோக்கினுள் நோக்கி இறைஞ்சினுள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

"யான் பார்க்காமலிருக்கும்போது மெதுவாய் என்னைப்பார்த் தாள். பின் வெட்கித் தலைகுனிந்தாள். அது, அப்படி அவள் பார்த்து வெட்கமடைந்தது, எங்கள் அன்பாகிய பயிர் வளர அவள் சொரிந்த நீராயிற்று" என்கிறுன் தலைவன். இது போல் முற்றும் குறிப்பே அமைந்த துறைகளையே உடையது தமிழர்தம் அகப் பொருள். இங்கும் உவமை இணைந்திருப்பது குறிப்பிடத்தகுந்தது.

ஆகவே, உள்ளுறை கூறிய தொல்காப்பியர் தொனியை நன்கு அறிந்து அதனுல் பெரும்பயன் தந்தார் தமிழுக்கு. முதலில் "உள்ளுறை உவமம்" என்று கூறியவர், பொருளிலக்கணம் சொல் லும் பொழுது ஐந்தென்று அதிகமாய்க் கூறுகிறுர்.

"உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு" என்று, த்வனி யைத்தான் கூறுகிறுர். உள்ளுறை என்பது த்வனி என்று நாம் கொள்வதில் தடை ஒன்றுமில்லை. அதனியல்பைக் கூறும்போது,

"பிறிதொடுபடாது பிறப்பொடு நோக்கி, முன்ன மரபின் கூறும் காலைத், துணிவுடன் வருமே துணிவினோர் கொளினே" என் கிறுர். இதன் கருத்து உவமை ஒன்றும் சிறப்பிக்கும் பொருள் ஒன்றுமா யிருபொருள்கள் கூறுமல் திணைச்சார்புபற்றிக் குறிப்பு வகையால் சொல்லும் போது, அறியவல்லோர் இன்னதற்கிது உவமம் என்று அறியும்படித் தோன்றும் என்கிறுர். இதுவுமன்றி ஏனை உவமும் வாய்பாடு முதலியவற்றுல் உணர்த்தப்படாவிடினும் (சுட்டிக்கூறு உவமை ஆயின்) என்றாற் போலக்கூறும் திறத்தால் குறிப்புப்பொருள் கொள்ளவேண்டும் என்று த்வனியின் ஹிருதயத் தைத் திறந்துவிடுகிறுர் அவர்.

"உவமப் பொருளின் உற்ற துணரும்"
தெளிமருங் குளவே திறத்திய லான

என்பது அவர் சூத்திரம்.

மதிப்புரை

திருநரசிங்கர்மாலை:—இது திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் 22-ஆம் வெளியீடு. பதிப்பாசிரியர்: திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கக் காரியதரிசி, திரு. ப. ரே. திருமலைஐயங்காரவர்கள். வேண்டுவோர், சென்னைத் திருவல்லிக்கேணிக் கணபதிமுதலி தெரு 15நிர். இல்லத்தில் உள்ள திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக் காரியாலயத்திற் பெறலாம்.

இம்மாலை, திருமால் உலகுய்ய அவதரித்த அவதாரங்களுள் நரசிங்கப்பெருமான் விஷயமானது. இதனுள் திரு நரசிங்கப்பெருமான்மீது ஆழ்வார்களும் அமுதனாரும் கம்பரும் அநுமந்தநகர் மதுரகவி, ஸ்ரீநிவாஸையங்கார்ஸ்வாமியும் இயற்றிய பாசுரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இடையே பரிபாடற்பகுதியும் ஏற்றஇடத்தே இணைக்கப்பட்டுள்ளது. பல நற்பணிகளை யாற்றிவந்த கமலாபுரம் R. இராமஸ்வாமிஐயங்கார் ஞாபகார்த்த வெளியீடாக இதனை அச்சிட்டுதவிய திரு. ப. ரெ. திருமலை ஐயங்காரவர்களுடைய கடவுட்பற்று முதலியவை போற்றற்பாலன.

இருதுசங்காரகாவியம்:—இஃது யாழ்ப்பாணம், மூகாந்திரம்—தி. சதாசிவ ஐயரவர்களால் இயற்றப்பெற்றது. வடமொழியில் 'ரிதுஸம்ஹாரம்' என்றகாவியம் மஹாகவி காளிதாஸ ரியற்றியதென்பர். அதனை முதனூலாகக்கொண்டு எழுந்த தமிழ்மொழிபெயர்ப்பு நூலிது. முதனூலினுள்ள நயம் சிறிதும் வழுவாதுநின்று இதன்கண் இன்பந் தருகின்றது. இதன் தமிழ்ச்செய்யுணடை மிகவும் திட்பநுட்பஞ் செறிந்து காணப்படுகிறது. இதன் தலைப்பெயரை மட்டும் வேறுபிரித்துவிட்டால், இஃதொரு தனித்தமிழ் முதனூலாக முன்னையோர் இயற்றிவைத்தது தானோ என்று ஐயுறுமாறு, அத்துணைத் திருத்த முடையதாக அமைந்து விளங்குகிறது.

இஃது ஆறு சருக்கங்களுடையதாய், முதுவேனிற் பருவமுதலாக, ஒவ்வோ ரிருதுவையும் பற்றிய வருணனையோடு காதலருளத்தே நிகழும் காமவின்பத்தின் மேம்பாடு தெரிப்பதாய்க் கற்ப

வர்களுக்குக் களிபேருவகை யூட்ட வல்லது. இதன் செய்யுட்களின் பொருளுணர்ச்சிக்கு இன்றியமையாத குறிப்புரையொன்றும் நூலாசிரியராலே வரையப்பட்டுள்ளது.

இவ்வாசிரியர் ஆங்கிலமுங் கற்று இலங்கையரசாங்கக் கல்வி யிலாகாவில் உத்தியோகம்வகித்து ஓய்வுபெற்றுள்ள ஒரு தமிழ்ப் பெரியாராவர். இங்ஙனமே இவர் மேலும் பல தமிழ்ப் பணிகள் புரிய இறைவனருளை வேண்டுகின்றோம்.

இப்புத்தகத்தின் விலை ரூ 1—சதம் 50. கிடைக்குமிடம்:— மூகாந்திரம்—தி. சதாசிவஐயரவர்கள்; சுன்னுகம்.

ஆழ்வார்கள்கண்ட அல்லிக்கேணி:—இந்நூலை ஆக்கியளித்தவர், ஸ்ரீ உ. வே. திருமலைநல்லான் சக்கரவர்த்தி, ராமகிருஷ்ணையங்கார் ஸ்வாமிகள் என்பார். இவர் வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லுநராய், சென்னைத் திருவல்லிக்கேணியில் வைணவசமயப் பிரசாரம் புரிந்து வருபவர். உரையாசிரியர் பெருந்தகை, ஸ்ரீ உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியஸ்வாமி இப்புத்தகத் திற்கு மதிப்புரை அருளியுள்ளார்.

திருவல்லிக்கேணியென்னும் திவ்யதேச வைபவமான புராண வரலாறுகளும், அங்குக் கோயில்கொண்ட எம்பெருமான் விஷய மாக ஆழ்வார்களருளிச்செயலான திருப்பாசுரங்களின் அர்த்த விசேஷங்களும் இப்புத்தகத்தில் நன்கு தொகுக்கப்பெற்று விளங்கு கின்றன. செவ்விய தீந்தமிழ்நடையி லெழுதப்பட் டிருப்பதால், இது படிப்பவர்களைப் பரவசமாக்க வல்லது.

திருமால்திருப்பதிகள் பிறவற்றின் பெருமைகளையும் இங்ங னமே இவ்வாசிரியர் தனித்தனி தொகுத்து வெளியிட்டுதவுதல் வேண்டற்பாலது. திவ்யதேச அநுபவத்தில் ஈடுபாடுடைய திருமா லடியார்க்கு அவை பேரின்பமளிக்குமென்பது ஒருதலை.

76-பக்கங்களுடைய இவ் வரிய புத்தகத்தின் விலை அணு 12. கிடைக்குமிடம்:—34, பெத்துநாயக்கன் தெரு, ஜி. டி. சென்னை 1.

தேவாரத்திருப்பதிகங்கள் (இராக ஸ்வர தாள அமைப்புடன்):— இச்சிறு இசையாராய்ச்சிப் புத்தகத்தின் ஆசிரியர், தேவார–திருப்புகழ் வித்வான், புதுவை திரு. ஆ. விநாயகமுதலியாரவர்களாவர். இதில் சைவத்திருமறையாகிய தேவாரத் திருப்பாடல்கள் சில, இராகதாள அளவுக்குறிப்புடன் ஸ்வரப்படுத்தப்பட்டு விளங்குகின்றன. மிகநுண்ணிய இசையாராய்ச்சிக் குறிப்புகளும் இதில் ஆங்காங்கு அமைந்துள்ளன.

பண்டைக்காலத் தண்டமிழ்ச் சான்றோர் வகுத்த பண்முறைகள் இக்காலத் தரியவாயின. ஆயினும் இத் திருப்பாடல்கள் இன்னிசையுடன் கூடியே இறைவனருட் பேற்றினை எய்துவிப்பனவாகலின், ஏற்ற பெற்றியான் இக்காலப் பண்முறை வகுத்த இந்நூலும் இயலிசைத் தமிழ்வாணர் பாராட்டுக்குரியதாம்.

காஞ்சிபுரம் உயர்சைவத்திருவாளர் க. வச்சிரவேல் முதலியார் B.A., L.T. அவர்களும், வேலூர் தமிழிசையாசிரியர் உயர்திரு T.A. சாம்பசிவமூர்த்தி ஆச்சாரியாரவர்களும் இதற்கு அரிய மதிப்புரைகள் வழங்கியுள்ளனர்.

48-பக்கங்கொண்ட இவ் வரிய புத்தகத்தின் விலை அணு 8. கிடைக்குமிடம்:—திரு. க. வச்சிரவேல் முதலியார் B.A., L.T. அவர்கள் 22, அனந்தோஜி பண்டிதர் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சீபுரம்.

நாலடியார்—இருவருரைத்திருத்தம்

திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்

[எக-ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதிகாரம்—செல்வநிலையாமை. பாட்டு—2.

33 துகள்தீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

இ—ள்:—வரவறிந்து அதற்குத்தகச் செலவுசெய்வாரிடத்தும் செல்வமானது நிலைத்திராமல் வண்டிச்சக்கரத்தின் ஆர்க்கால் போல இடம்மாறிமாறி வருவதாக இருக்கிறது. அதனால், குற்றமற்ற பெருஞ்செல்வமாகிய, ஏர்த்தொழில் நடத்தலால் கிட்டும் உணவுப்பொருள்கள் உங்களிடமுண்டானநாள்முதல் உற்றாருறவினர் முதலிய பலருடனுங்கூடிப் பொதுவாக உண்ணுங்கள். எ-று.

அகடுற வுண்க என மாறிக்கூட்டுக. அகடுற - பொதுவாக. அகடு - நடு - பொது. கூழ் - உணவுப்பொருள். "படைகுடிகூழ்" திருக்குறள். கூழினைத் துகள்தீர் பெருஞ் செல்வமென்றார்; கள்ளங் கவடுகளுக்கிடமாகாத ஏர்த்தொழில் செய்தும் செய்வித்தும் அதுவருதலின். ஒருவனுக்குப் பெருஞ்செல்வந் தோன்றுவது பெரும்பாலும் வலிகொண்டும் நன்முயற்சியின்றியுமாதலின் அது துகள்தீர்ந்ததாகாது. அதனால் குற்றந்தீர்ந்தசெல்வமென்றது பகடு நடந்த கூழினையே குறிக்கும். அது உயிர்வாழ்தற்கு இன்றியமையாததாகலின் அதனைப் பெருஞ்செல்வமென்று புகழ்ந்தார். செல்வம் அகடுறநில்லாது எனக் கூட்டி, செல்வம் நடுவுநிலைபொருந்த நில்லாது என்றனர் இருவர். நடுவுநிலை பொருந்தல் என்பது செல்வத்திற்குப் பொருந்தாமையறிக. வலிகொண்டும் - நேர்வழியின்றியும்.

அதிகாரம்—அறன்வலியுறுத்தல். பாட்டு—40.

34 மான அருங்கல நீக்கி யிரவென்னும்
ஈன இளிவினால் வாழ்வேன் மன்—ஈனத்தால்
ஊட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

இ-ள்:-இழிதொழில்கள்செய்து உண்பித்து வளர்த்தாலும் இந்த வுடம்பு (நான் உயர்நிலையடைதற் குபகாரமாகத்) தன்வாழ்நாளை நீள்வித்துக்கொண்டு நிலையுறுமானால் மானமாகிய உயர்ந்த அணிகலத்தை நீக்கியும் இரத்தல் என்று சொல்லப்படும் மிகஇழிந்ததான தொழிலைச்செய்தும் உயிர்வாழ்வேன். ஆனால் அந்நிலை இவ்வுடம் பிற்கில்லையே? என்ன செய்யலாம்? எ-று. மானங்கெட இரத்தல் அறமன்று என்பதாம்.

மன் ஒழியிசைக்கண்வந்தது. சேர்ந்தென்பது சேரஎனத் திரிக்கப்பட்டது. பிறரெல்லாம் உறுதிசேர்ந்தென்பதனை உடம்பு நீட்டித்து நிற்றலுக்கு அடையாக்கி, வலிமை பொருந்தி எனப் பொருள்கூறினர். வீடுபெறுதற்கு உபகாரமாகஅன்றி, இம்மையின் பத்திற் குபகாரமாக உடம்பு நீட்டித்து நிற்றலையும் வலிபெறுதலை யும் ஆத்திகர் விரும்பாராகையால் அஃது உரையன்மை அறிக. உறுதி - வீடுபேறு. "உடம்பின்பிறவியே, தானடைந்தவுறுதியைச் சாருமால்" பெரியபுராணம்; பாயிரம். பிறபிழைகள் திருத்த இங்கிடமில்லை.

அதிகாரம்—சினமின்மை. பாட்டு—31.

35 மதித்திறப் பாரும் இறக்க மதியா
மிதித்திறப் பாரும் இறக்க—மிதித்தேறி
யீயுந் தலைமே லிருத்தலால் அஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

இ—ள்:—மதித்தற்குரியாரை மதியாமல் - மதியாதபடி தங் களை உயர்ந்தோராக மதித்து நெறிகடப்பாரும் கடக்கட்டும். மிதிப் பது போலப் பெரியாரிடத்தில் அவமதிப்புச்செயல்கள் செய்து நெறிகடப்பாரும் கடக்கட்டும். அழுக்கை மிதித்து இழிந்த பிராணியாகிய ஈயும் ஏறித் தலைமேலிருத்தலால் அதனையறிபவர்

(வெகுளப்பட்டார் நெஞ்சைச்சுடுவதான) சினத்தை அவ்விருதாத் தாரிடத்திலும் கொள்ளாதிருத்தல் சான்றோராவார்க்கு நல்லது. எ-று. மதியா இறக்க எனமாறிக்கூட்டுக. மதித்தற்குரியாரை மதியாமையாவது அவரிடம் பணிவுதோன்ற நடவாமை. உரிய மரியாதைகள் செய்யாமையும் அவமதிப்புச் செய்தலும் எனப் பெரியார்ப்பிழைத்தலை இருவகையாக்கினர். இறத்தல் - நெறிகடத் தல். பிறர் செல்லுதல், நடத்தல் எனப்பொருள் கூறினர். மதித் திறப்பார் என்பதற்குத் தம்மைக் கௌரவித்துச் செல்பவரும் என்று கூறினர். அது 'காயுங்கதமின்மை நன்று' என்பதனோடு பொருந்தாதிருத்தலை அறிக. அழுக்கு - பவ்வீ. சினங்கொள் ளாமை அதற்குரிய சொற்செயல்களை நிகழ்த்தாமை.

அதிகாரம்—தீவினையச்சம். பாட்டு—129.

36 ஓக்கிய வொள்வாள்தன் ஒன்னார்கைப் பட்டக்கால்
ஊக்க மழிப்பதூஉம் மெய்யாகும்—ஆக்கம்
இருமையுஞ் சென்று சுடுதலால் நல்ல
கருமமே கல்லார்கட் டீர்வு.

இ—ள்:—தன்னைக் காத்துக்கொள்ளவென்று வரைந்துவைத் திருந்த வாள் பகைவர் கையிலகப்பட்டதாக ஒருவனறிந்தால் அவ னது உற்சாகசக்தியைக் கெடுப்பதும் மெய்யாகும். அறிவிலா தார்க்கு ஆளாவதனால் வரும் விளைவுகள் இம்மை மறுமையிரண்டி லும் வந்து துன்புறுத்துவதனால் (உதவி வேண்டி) அவர்க்காளா யிருத்தல் (அதாவது சுதந்திரமிழத்தல்) நல்லகாரியமாகுமா? ஆகாது என்றபடி.

ஏ-எதிர்மறை வினா. வாளிழந்ததன்றி ஊக்கமுமழிவதாயிற்று என்று பொருள்படுதலால் உம்-எச்சப்பொருளது. வாள்போன் றது தன்னைக்காப்பதற்கென்றே தன்னிடமிருந்த சுதந்திரம். ஒன் னார் கைப்பட்டவாள்போன்றது கல்லார்க் காளாயிழந்த சுதந்திரம். தீர்வு-சுதந்திரமிழந்து பிறர்க்காளாதல். "தீர்ந்துதன்பால் மனம் வைக்க" "தீர்ந்தார் தம்மனத்துப் பிரியாது" திருவாய்மொழி, க-ம் பத்து, 5வது; 2-ம் பத்து, 3. ஓக்குதல்-வரைந்துவைத்தல்-வேறாக

வைத்தல். "ஒன்னிணைப் பலியோக்குவல்" திருக்கோவையார். 235. "சமிதை முக்குழிக் கூட்டத்துட்பட வோக்கி" பெருங்கதை. 2, 3. வருவாயை முன்னிட்டு அறிவில்லாதவனிடம் நண்பனாக அல்லது ஆளாக இருத்தல் தன் சுதந்திரமிழந்து அவன்விரும்பிய படி நடக்க இடமாகும். பழிபாவங்களுண்டாகும்படி செயல்புரிய நேரும். அதனால் ஆக்கமிருமையுஞ்சென்று சுடுவதாயிற்று. ஆக்கம்-ஆவது இங்கே பழிபாவங்கள். பிறர், ஆக்கம்-உபகாரம் என்றனர். தம்மிருமைக்கும் கேடுண்டாகும்படி கற்றவர் கல்லாதவர்க்கு உபகாரம் செய்வாரா?

அதிகாரம்—இரவச்சம். பாட்டு—307.

37 என்றும் புதியார் பிறப்பினு மிவ்வுலகத்
தென்று மவனே பிறக்கலான்—குன்றின்
பரப்பெலாம் பொன்னொழுகும் பாயருவி நாட!
இரப்பாரை எள்ளா மகன்.

இ—ள்:—குதிக்கின்ற நீர்வீழ்ச்சிகள், தாம்விழுதற்கிடமான பரந்த குன்றிடமெங்குமுள்ள பொன்னுடன் யாறாய் ஒழுகுகின்ற நாட்டிற்குத்தலைவ! பிறப்பவரெல்லாம் ஒவ்வொரு பிறப்பிலும் இவ்வுலகத்திற்குத் தாம் புதியராய்ப்பிறந்தாலும் (அவர்கள் முன்னே பிறந்து பழகிய பழக்கமுடையவர்களேயாவர்; எப்படி எனில்? அந்தப்பழக்கத்தாலேயே தம்மைப் பிறர் படிப்பிக்காமலிருக்கவும் இரப்பாரைத் தம்மில் ஒத்து இகழ்கின்றனர்.) அதனால்,இரப்பாரை யிகழாத மனிதன் ஒருவன் இருப்பானாயின் அவனே என்றும் பிறவாதவனென்று கொள்ளத்தகும்; ஆனால் அது நமக்கு உடன்பாடன்மையின் இரப்பாரை யிகழாதவன் இவ்வுலகிலில்லையென்றே கொள்வோம். எ - று. இருப்பானாயினென்பது, அவனே என்பது நோக்கி வருவிக்கப்பட்டது. பொன் என்றது நிலத்திற்கு வளமாவனவும் தங்கம் முதலிய தாதுக்களுமாம். பிறர்கூறிய வுரை பாட்டின் பொருளாகாமை அவருரைகண்டு தெளிக.

(தொடரும்.)

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
[illegible]	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்	5	0	0
[illegible]	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணநூல் (5) இனியநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மனீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	0	12	0
71.	திணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

குறிப்பு:-1. கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

2. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. 4-8-0. இதுவரை 46 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ. 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.